இனி இது ரகசியம் அல்ல!

அரசுப் பக்கத்தில் இருக்கும் தலைவர்களிடம் ஒரு வழக்கம் உண்டு. கண்மண் தெரியாமல் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய ஆரவார அறிவிப்பை விடுப்பார்கள். அவற்றுக்கான ஆரம்பவிழாக்களும் எடுப்பாக நடக்கும். அடிக்கல் நாட்டப்படும். பக்கம் 02

பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 03 வெள்ளிக்கிழமை 19.07.2019 கதிர் 256

# கன்னியாவில் பௌத்த விகாரை கட்டுமானத்தை உடன் நிறுத்துக!

## ஜனாதிபதி மைத்திரி அதிரடி உத்தரவு



கொழும்பு, ஜூலை 19

திருகோணமலை, கன்னியாவில் சர்ச்சைக்குரிய இடத்தில் புதிய பௌத்த விகாரைக் கட்டுமானப் பணிகளை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவு பிறப்பித்துள்ளார். பக்கம் 11

## 5 ஜி அலைவரிசை குறித்து எந்த உடன்பாடும் இல்லை!

### மறுக்கிறார் யாழ். மாநகர முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூலை 19

5ஜி அலைவரிசை தொடர்பாக எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லையென யாழ். மாநகர முதல்வர் பக்கம் 11

## புதிய கூட்டில் இணைகிறார் அனந்தி? நேற்று முன்னணியுடன் திடீர் பேச்சு!!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழர் அரசியலில் புதிய கூட்டு அமைப்பது தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலை பக்கம் 11

## ஸ்ரீகொத்தாவை முற்றுகையிட தயாராகும் பௌத்த பிக்குகள்!



கொழும்பு, ஜூலை 19

பௌத்த பிக்குகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் காணொளியையும் கருத்துக்களையும் வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் பக்கம் 02

## பாதுகாப்புப் படையினர் எந்நேரமும் தயார் நிலை

### கூறுகிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, ஜூலை 19

பயங்கரவாதச் செயற்பாட்டுக்குக் காலநேரம் கிடையாது என்பதால், பாதுகாப்புப் படையினர் பக்கம் 11

## 5ஜி கோபுரங்கள் வேண்டாம்!

### யாழ்ப்பாணம் மாநகர சபையை முற்றுகையிட்டுப் போராட்டம்




யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 5 ஜி அலைக்கற்றைக் கோபுரம் அமைக்கும் செயற்பாடுகளை நிறுத்தக் கோரி, மாநகர பக்கம் 11

## அரசுக்கு கூட்டமைப்பின் ஆதரவு தொடரும் வாய்ப்புக்கள் இல்லை!

### கூறுகிறார் சி.வீ.கே. சிவஞானம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 19

தொடர்ந்தும் கூட்டமைப்பு தமக்கு ஆதரவு வழங்கும் என பிரதமரும் அவரது அரசும் நினைத்தால் அது அவர்களின் தவறு. ஏனெனில் அவ்வாறான ஆதரவு வழங்கும் நிலை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

இவ்வாறு தெரிவித் பக்கம் 11

## தமிழ் மக்களை ஏமாற்ற முற்படுகின்றார் ரணில்!

### சாடுகின்றார் கஜேந்திரகுமார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஐக்கிய தேசியக் கட்சியைக் காப்பாற்றி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்களிடமிருந்து பாதுகாத்து அவர்களுக்கான வாக்கு வங்கியை அதிகரிப்பதற்காகவே யாழ் வந்த பிரதமர் இரண்டு வரு பக்கம் 11

## ஜனாதிபதியின் சந்திப்பில் பங்கேற்காத கூட்டமைப்பு!

கொழும்பு, ஜூலை 19

கன்னியா பிள்ளையார் கோவில் விவகாரம் குறித்து ஜனாதிபதியுடன் நேற்று பேச்சு நடத்த பக்கம் 11

## இந்து ஆலயங்களில் வேள்வி தடை நீக்கம்

### மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி

கொழும்பு, ஜூலை 19

இந்து ஆலயங்களில் மிருகபலியிட்டு வேள்வி நடத்த தடை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தள் பக்கம் 02

## மஹவ – ஓமந்தை இடையே விரைவில் புதிய ரயில் பாதை

கொழும்பு, ஜூலை 19

115 வருட காலம் பழைமை வாய்ந்த மஹவ – ஓமந்தை ரயில் பாதையை முழுமையாகப் புன பக்கம் 02

## வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றியாகவேண்டும்!

### வலியுறுத்துகின்றது பிரிட்டன்



லண்டன், ஜூலை 19

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவேண்டும் என பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அன்றூ மியுரிசன் வலி பக்கம் 11

# யாழில் இன்று போராட்டம்!

கன்னியாபோராட்டத்தின்போது தென் கயிலை ஆதீனம் தாக்கப்பட்டமைக்குஎதிர்ப்புதெரிவித்து யாழ் கைலாச பிள்ளையார் முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கண்டன போராட்டத்திற்கு சைவ மகா சபை உள்ளிட்ட சைவ அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

இது குறித்து அகில இலங்கை சைவ மகாசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் –

கன்னியாபோராட்டத்தின்போது ஆதீனத்தின் மீது பொலிசார் முன்னிலையில் தேநீர் வீசி தாக்குதல் நடத்திய காடையர்கள் கைது செய்யப்படாமை கடும் கண்டனத்திற்குரியது.

சாத்வீகமான முறையில் கன்னியாவின் தமிழர் பூர்வீகத்தை பாதுகாக்கும் போராட்டத்தை வழிநடத்திய தமிழர் ஆன்மீகத் தலைவர்களில் ஒருவராகிய வணக்கத்துக்குரியதென்கைலை ஆதீனத்தின் மீது வன்ம உணர்வோடு பொலிஸ் வாகனத்துக்குள்ளேயே வைத்து தேநீர் வீச்சினை மேற்கொண்டவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையுமில்லை.

போராட்டத்தை அகிம்சை முறையில் மேற்கொண்ட தமிழ் மக்களை கொடுங்கரங்கள் கொண்டுஅடக்கமுற்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஒட்டுமொத்த தமிழ் மத, அரசியல், சமூக தலைமைகளும் தங்கள் கடுமையான எதிர்வினையை வெளிப்படுத்த வேண்டும் என வேண்டி நிற்கின்றோம்.

அனைவரும்ஒன்றிணைந்து எமது சமய தலைவர்களில் ஒருவரும் தமிழர்களின் பூர்வீக கன்னியாவை மீட்கும் போராட்டத்தின் முதன்மை வழிகாட்டியுமான தென் கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளாருக்கு இழைக்கப்பட்ட கொடுஞ்செயலுக்கு நீதி வேண்டி எமது கண்டன குரலை பதிவு செய்ய யாழ் கைலாச பிள்ளையார் முன்றலில்இன்றுமாலைஒன்றுகூடுவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்து...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், மேன்முறையீட்டாளரான கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலய நிர்வாகத்துக்கு வழக்குச் செலவை வழங்குமாறும் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம்கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலயம் சார்பில் மேன்முறையீட்டு மனுவை சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.எஸ். கணேசராஜா, மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

மனுவின் எதிர்மனுதாரர்களாகச் சட்ட மா அதிபர், சைவ மகா சபையினர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு மீதான விவாதம், சமர்ப்பணங்கள் நிறைவடைந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பு நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண ஆலயங்கள் சிலவற்றில் மிருக பலியிட்டு வேள்வி நடத்தப்படுகின்றது. அதற்கான அனுமதியை இறைச்சிக்கடைச் சட்டத்தில் உள்ளூராட்சிச் சபைகளும் சுகாதாரத் திணைக்களமும் வழங்குகின்றது. அவ்வாறு அனுமதி வழங்கப்படுவது தடை செய்யப்படவேண்டும் எனக் கோரி சைவமகா சபையினர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தலையீட்டு நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்தனர்.

இந்த மனுவைச் சட்டத்தரணி வி.மணிவண்ணன் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார். அன்றிலிருந்து வேள்விக்கு இடைக்காலத்தடை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஒன்றரை வருடங்கள் விசாரணையிலிருந்த இந்த வழக்குக்கு 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி இறுதிக் கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் வழங்கினார்.

இந்துக்கோவில்களில்வேள்வி பூசைகளின்போதும், ஏனைய எந்த பூசைகளின்போதும் மிருகங்கள் பலியிடப்படுவதற்கு முற்றாக தடை விதிக்கப்படுகிறது.

இந்தத் தடை உத்தரவை மீறி எவரேனும் மிருக பலியிடலை மேற்கொண்டால் அது தொடர்பாக ஒரு பொதுமகன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தாலும் அதன் மீது உடனடியாக விசாரணை செய்து குற்றமிழைத்தவரை கைதுசெய்து அருகிலுள்ள நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும் என வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்படுகிறது என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

இந்தத் தடை உத்தரவுக்கு ஆட்சேபணை தெரிவித்தும் வேள்வியின் பண்பாட்டுத் தேவையை வலியுறுத்தியும் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. (ஐ)

## ஸ்ரீகொத்தாவை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ராமநாயக்கவை இரண்டு நாட்களுக்குள் கைது செய்யாவிட்டால் ஐக்கியதேசியக்கட்சியின்தலைமையகமான ஸ்ரீகொத்தாவை முற்றுகையிடுவோம் என பௌத்த பேரினவாத அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, இலங்கையில் இனவாதத்தைப் பரப்பி வன்முறைகளில் ஈடுபடும் பௌத்த பிக்குகள் அனைவரும் சிறு வயதில் பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளானவர்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பாக பௌத்த விகாரைகளிலேயே இந்த பௌத்த பிக்குகள் சிறு வயதிலேயே பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இராஜாங்க அமைச்சரின் இந்தக் கருத்தினால் கடும் ஆத்திரத்துக்கு உள்ளாகியிருக்கும் பௌத்த பேரினவாத அமைப்புக்கள் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில் சிங்கள ராவய, ராவண பலய, சிங்கலே ஆகியவற்றின் தலைமைப் பிக்குகள் பொலிஸ் தலைமையகத்திற்கு நேற்று முன் தினம் காலை நேரில் சென்று இராஜாங்க அமைச்சருக்கு எதிராக முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தலைமையிலான அதிகாரிகள் பொலிஸ் தலைமையகத்துக்கு வெளியே வந்து தலைமைப் பிக்குமார்களைச் சந்தித்து முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையிலேயே, இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை கைது செய்வதற்கு இரண்டு நாள் கால அவகாசம் வழங்கி, பௌத்த பேரினவாத அமைப்புக்கள் பொலிஸார் முன்னிலையில் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ஐ)

## மஹூல - ஓமந்தை..

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

ரமைக்கப்பதற்காக, தற்போது பாவனையில் உள்ள ரயில் பாதையை முழுமையாக நீக்கும் வேலைத்திட்டம் நேற்றுப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

செயற்திட்ட ஒப்பந்த நிறுவனமான ஐகோன் இன்டர்நெனல் நிறுவனத்தின் பங்குதாரர்களுடன் இந்த நிர்மாணப்பணி ஒப்பந்தத்தில் அமைச்சர் கைச்சாத்திட்டார்.

வடக்கு ரயில் சேவையில் மஹூவ – ஓமந்தை இடையிலான ரயில் பாதை 133 கிலோ மீற்றராகும். மஹூவ தொடக்கம் அநுராதபுரம் வரையிலான ரயில் பாதை 1904 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது.

அநுராதபுரம் தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை 1905 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இந்த ரயில் பாதைகள் எதுவும் சிறிதளவேனும் புனரமைக்கப்படவில்லை. இதனால் ஓமந்தை வரையில் ரயில் சேவைகள் மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்திலேயே பயணிக்கிறது.

குறுகிய தூரத்தைக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் ரயில் சேவை பயன்பாட்டுக்கு மாத்திரம் 3 மணித்தியாலங்கள் எடுக்கிறது. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். இதனால் தான் இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

மஹூவ – ஓமந்தை ரயில் பாதை நிர்மாணப் பணிக்காக 91.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய கடனுதவியின் ஊடாக இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய ரயில் பாதை நிர்மாணிப்புடன் மேலதிகமாக 12 ரயில் நிலையங்களும் ரயில் பாதை வடிகால் பகுதிகளும் திருத்தியமைக்கப்படும். புதிய தொழிநுட்பங்களை உள்ளடக்கி மதவாச்சி மற்றும் வவுனியா வரை கண்டி – யாழ்ப்பாணம் ரயில் சேவைகள் தற்போது காணப்படுவதை காட்டிலும் நவீனப்படுத்தப்படும்.

புதிய ரயில் பாதையில் மணித்தியாலத்துக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்ய முடியும். மூன்று வருட காலத்துக்குள் இந்தச் செயற்திட்டம் முழுமைப்படுத்தப்படும்.

முதற்கட்ட நடவடிக்கையாக மஹூவ – அநுராதபுரம் வரை ரயில் பாதை நிர்மாணிக்கப்படும். இரண்டாவதாக அநுராதபுரம் – ஓமந்தை வரையில் பாதை நிர்மாணிக்கப்படும். இந்த நிர்மாணப் பணிகளின் போது மஹூவ – அநுராதபுரம் வரை 6 மாத காலத்துக்கும் அநுராதபுரம் – ஓமந்தை வரை ரயில் பாதை 6 மாத காலத்துக்கும் மூடப்பட்டிருக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பயணிகள் மாற்று ரயில் பாதைகளை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# இரட்டையர்களான மாணவிகளை அடித்து அள்ளிச் சென்றது வெள்ளம்

## ஒருவர் உயிரிழப்பு; ஒருவரை காணவில்லை!



அக்கரபத்தனை பிரதேசத்தில் நேற்றுப் பெய்த கடும் மழை காரணமாக, நீரில் அடித்துச் செல்லப்பட்ட இரட்டைச் சகோதரிகளான பாடசாலை மாணவிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

அத்துடன், காணாமற்போன மற்றுமொரு மாணவியைத் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டொரிங்டன் தோட்டத்திலிருந்து கொத்மலை ஓயாவுக்கு நீரைக் காவிச் செல்லும் கால்வாய் ஒன்றுக்கு அருகிலுள்ள தமது வீட்டுக்குச் செல்ல முயன்ற மாணவிகள் இருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது, மாணவிகள் இருவர் காணாமல் போயிருந்தனர். இந்த நிலையில் அதில் ஒரு மாணவி சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மதியழகன் லக்ஷ்மி (வயது–12) எனும் மாணவி உயிரிழந்துள்ளதோடு, மதியழகன் சங்கிதா (வயது–12) எனும் மாணவியை தேடும் பணியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த மாணவியின் சடலம் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இனி...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

அத்திபாரம் போடப்படும்.

அந்த எடுப்புகளோடு விடயம் அடங்கி விடும். பிறகு எதுவும் நடக்காது.

இப்படிப் படாடோப அறிவிப்புகளுடன் அரசியல் நடத்தும் சில பிரகிருதிகள் இருக்கின்றார்கள்.

இந்த வரிசையில் தன்னையும் சேர்த்து மாட்டிவிட்டு விட்டார்களோ – அதுவும் தனது அரசியல் களமான கிளிநொச்சியில் தன்னைத் தலைகுனிய வைத்து விட்டார்களோ – என்ற சீற்றம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான ஸ்ரீதரனுக்கு.

கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடந்த சுகாதார அமைச்சுத் தொடர்பான ஓர் உயர் மட்டக் கூட்டத்தில் ஸ்ரீதரனின் இந்தச் சீற்றம் கொப்பளித்தது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவின் முகம் கோணும்படி வாயால் வாங்கித் தள்ளினார் அவர்.

விடயம் இதுதான்:–

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்றை இருபது கோடி ரூபா செலவில் அமைப்பது என்ற அறிவிப்போடு அதற்கு அடிக்கல் நடுவதற்கு வந்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அவருடன் சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன, சுமந்திரன் எம்.பி. எல்லோரும் வந்திருந்தனர். கிளிநொச்சி மாவட்ட நிகழ்வு என்பதால் ஸ்ரீதரன் எம்.பியும் பங்குபற்றினார்.

அடிக்கல் நடும் வேளையில் பிரதமர் ரணில் ஒரு குயுக்தி பண்ணினார். நீங்கள்தான் மண்ணின் மைந்தன். நீங்கள் அத்திவாரம் வையுங்கள்." – என்று ஸ்ரீதரனை நெட்டித் தள்ளி வற்புறுத்தினார். தலைப்பாவும் கட்டிக் கொண்டு அத்திபாரம் வைக்க முன்வரும் ஸ்ரீதரன் எம்.பியின் முதுகில் ரணில் தட்டிக் கொடுக்கவும், சுமந்திரன் கைதட்டிச் சிரிக்கவும் சரியாக இருந்தது. அந்தப் படம் சமூக ஊடகங்களில் தாராளமாக வெளிவர, வேலை இல்லாத சில தரப்புகள் வெறும் வாயில அவல் கிடைத்த கதையாக ஸ்ரீதரனை மென்று, தின்று, தள்ளின.

இவ்வளவும் நடந்து இப்போது ஏறத்தாழ ஆறு மாதங்கள். அதற்குப் பின்னர் இவ்விடயத்தில் எதுவும் நடக்கவேயில்லை – அத்திபாரத்துக்குப் போட்ட சீமெந்து இறுகிப் போனதைத் தவிர.

நிதி ஒதுக்கப்படாத ஒரு திட்டத்துக்கு ஆரவாரம் ஏற்பாட்டுடன் அறிவிப்பு விடுத்து, எடுப்போடு விழா நடத்தி, ஆர்ப்பாட்டமாக அத்திபாரம் வைத்ததோடு எல்லாம் அடங்கிவிட்டன. எதுவுமே அதற்குப் பிறகு இல்லை. எதுவும் நடக்கும் என்று நம்புவதற்கான அசுமாத்தம் கூட இல்லை.

இதனால் கொதித்துப் போனார் ஸ்ரீதரன் எம்.பி. என்னை வைத்து காமெடி, கிமொடி பண்ணி விட்டார்களோ....!" – என்ற மனப்பிரமை அவருக்கு.

அதைத்தான் கொழும்பு கூட்டத்தில் கொட்டித் தீர்த்தார் அவர். இலங்கை முழுவதிலும் உள்ள சுகாதார சேவைகளுக்கான உயரதிகாரிகள் கூட்டம் கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடந்தது. எம்.பிக்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி வைத்தியசாலை விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டட விவகாரம் தொடர்பில் சீற்றத்தில் இருந்த ஸ்ரீதரன் அந்தக் கூட்டத்துக்குப் போனார். தமது வெப்பியாரத்தைக் கொட்டி தீர்த்தார். அவர் பேசிய பேச்சில் அமைச்சர் ராஜித குழம்பிப் போனார். அவருக்கும் ஸ்ரீதரன் எம்.பிக்கும் இடையில் வாதப் பிரதிவாதம் தொடர்ந்தது.

அமைச்சரைக் காப்பாற்ற யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி சில கருத்துக்களை முன்வைக்க முயன்றார். ஆனால், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் குமாரவேள் எழுந்து பதிலடி தந்தார். டாக்டர் சத்தியமூர்த்தி தான் பணிப்பாளராக இருக்கும் யாழ். ஆஸ்பத்திரி பற்றிப் பேசட்டும். தமது சொந்த இடம் கிளிநொச்சி என்பதற்காக அந்தப் பகுதி சுகாதார சேவைக்குள் அவர் தலையிட்டுக் கருத்துக் கூறுவது பொருத்தமற்றது." – என்றார் வைத்தியர் குமரவேள்.

இறுதியாக சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி வசந்தா பெரேரா தலையிட்டு சமாளித்தார்.

ஏதோ தவறு நடந்துதான் போய்விட்டது. ஏதேனும் ஒரு வழியில் கிளிநொச்சி விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்ட டத்துக்குத் தேவையான இருபது கோடி ரூபா நிதியைத் தேடித் தர முயல்கிறோம். ஸ்ரீதரன் எம்.பி. பொறுமை பேண வேண்டும்." – என்று கோரினார் அவர். அதன் பின்னர்தான் அடங்கினார் ஸ்ரீதரன்.

மாவட்டத்துக்கு இப்படி ஒரு பயர் பிராண்ட்' எம்.பி. இருந்தால் தான் காரியம் ஆகும் போல....!

- மின்னல் -

# ஐ.தே.க. ஆட்சியைப் பாதுகாக்க முயற்சிக்கவில்லை அமெரிக்கா!

## தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் விளக்கம்

**கொழும்பு, ஜூலை 19**
**இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு அமெரிக்கா நிதி அளிக்கவில்லை என்றும், ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் வைத்திருப்பதற்கும் அமெரிக்கா முயற்சிக்கவில்லை என்றும் அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். முகநூல் மூலம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நேற்று முன்தினம் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –


இலங்கை மக்களே, தற்போதைய அரசைத் தேர்ந்தெடுத்துள்ளனர், இன்னும் சில மாதங்களில் அடுத்த அரசை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

மக்களின் விருப்பத்தை அமெரிக்கா ஆதரிக்கிறது. அடுத்து எந்த அரசு பதவிக்கு வந்தாலும், அவர்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளது.

ஒரு வலுவான, இறைமை கொண்ட, சுதந்திரமான இலங்கையை அமெரிக்கா ஆதரிக்கிறது. இந்தோ – பசிபிக் பாதுகாப்பில் இலங்கையின் பங்களிப்பையும் மதிக்கிறது. இலங்கை இந்த விடயத்தில் இன்னும் திறமையாக இருக்க உதவுவதற்காகவே, வருகைப் படைகள் உடன்பாடு தொடர்பான பேச்சுக்களில் அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளது.

வருகைப் படைகள் உடன்பாடு என்பது ஒரு நிர்வாக உடன்பாடு ஆகும். இது நுழைவு / வெளியேறும் தேவைகள், தொழில்முறை உரிமங்களை அங்கீகரித்தல் மற்றும் பெறப்பட்ட சேவைகளுக்கான கட்டணங்கள் உள்ளிட்ட வழக்கமான நடைமுறைகளைத் தரப்படுத்துகிறது.

தற்போது ஒவ்வொரு பயிற்சி, கப்பல்



வருகை அல்லது பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட நிகழ்வுக்கும் முன்னர் இந்தப் பிரச்சினைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

இதற்கு நிறைய நேரம் தேவைப்படுகிறது. இந்தப் பிரச்சினைகளை எமது நாடுகள் எவ்வாறு தீர்க்க விரும்புகின்றன என்பதை முன்கூட்டியே ஒப்புக் கொள்ள முடிந்தால், நாங்கள் மற்றப் பணிகளுக்கு அந்த நேரத்தைச் செலவிட முடியும்.

சீனாவுக்கும் வருகைப் படைகள் உடன்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இது இலங்கையுடனான நீண்டகால இருதரப்புக் கூட்டு பற்றியது.

ஒரு குறிப்பிட்ட சட்டத்தை குறிப்பிட்ட சூழ்நிலைகளைக் கையாளுவது தொடர்பாக பல நாடுகளில் உடன்பாடுகள் உள்ளன.

உதாரணத்துக்கு, வெளிநாடுகளில் இலங்கைப் படையினர் குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம்சாட்டப்பட்டபோது, அவர்கள் இலங்கைக்கே அனுப்பப்பட்டனர். இலங்கைச் சட்டத்தின் கீழேயே விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொண்டனர். இதுபோன்ற நிகழ்வுகள் மிகவும் அரிதானவை – என்றார். (ஐ)

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் சமன் திஸாநாயக்க கைது



*கொழும்பு, ஜூலை 19*

*திடீர் உடல்நலக்குறைவு காரணமாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திஸாநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.*

*குற்றப்புலனாய்வு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.*

*அவன்கார்ட் வழக்கில் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு சமன் திஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மனு நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது.*

*இதனை அடுத்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் சமன் திஸாநாயக்க மற்றும் தமயந்தி ஜெயரத்ன ஆகியோரைக் கைது செய்து ஜூலை 19 ஆம் திகதிக்கு முன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு அறிவுறுத்தினார்.*

*அவன்கார்ட் வழக்கில் சந்தேக நபர்களைக் கைது செய்வது குறித்து பதில் பொலிஸ் மா அதிபர் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரியபோதே சட்டமா அதிபர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.*

*அவன்கார்ட் மிதக்கும் ஆயுத களஞ்சியத்துக்கு வழங்கப்பட்ட அனுமதி காரணமாக அரசுக்கு 1,140 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*

## வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் சிறப்பான முழு நிலாக் கலை விழா





வவுனியா, ஜூலை 19

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு கல்வி வலயம் இணைந்து நடத்திய முழு நிலா கலை விழா சேமமடு சண்முகானந்த மகா வித்தியாலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் சிவராஜா, வவுனியா தெற்குவலய ஆசிரிய வள மத்திய நிலைய முகாமையாளர் பரஞ்சோதி, வவுனியா வடக்கு



ஆசிரிய வள மத்திய நிலைய முகாமையாளர் ஜெயசந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## களனி கங்கைக்கு அருகே வசிப்போருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

களனி கங்கைக்கு அண்மித்த கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

லக்ஸபான நீர்த் தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதன் காரணமாக மக்கள் அவதானமாக இருக்குமாறு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சில பிரதேசங்களில் பெய்து வருகின்ற அடை மழை காரணமாக லக்ஸபான நீர்த் தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்படவுள்ளன. (ஐ)

## குருநாகல் நீதிவானை விசாரிக்குமாறு கேட்கின்றது ஊடகவியலாளர் சங்கம் !

கொழும்பு, ஜூலை 19

குருநாகல் டாக்டர் ஷாபி ஷிஹாப்தீன் மீதான வழக்கில் குருநாகல் நீதிவான் நடந்து கொண்ட விதம் குறித்து விசாரணை நடத்துமாறு இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்து கோரிக்கை விடுத்துள்ளது.

குருநாகல் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் குருநாகல் நீதிவானின் மனைவிமாரும் இதே வைத்தியசாலையில் மருத்துவர்களாக பணியாற்றுவதாலும் – நீதிமன்றத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளர் அளித்த சாட்சியத்தை மன்றில் பதிவிட வேண்டாமென நீதிவான் தரப்பில் இருந்து சொல்லப்பட்டதா என்பது பற்றியும் ஆணைக்குழு ஆராய வேண்டுமென ஊடகவியலாளர் சங்கம் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, டாக்டர் ஷாபி குறித்து மேற்கொள்ளும் மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட பிரிவிடம் ஒப்படைக்குமாறு நீதிச் சேவைகள் ஆணைக்குழு பதில் பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை

### ஐ.தே.க. பின்வரிசை எம்.பிக்கள் திட்டம்

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின் வரிசை உறுப்பினர்களால் இந்தக் குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்க தவறியமை மற்றும் கடந்த காலச் செயற்பாடுகளில் அரசமைப்பை மீறியமை உள்ளிட்ட காரணங்களை உள்ளடக்கி இந்தப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

இந்தப் பிரேரணையைத் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெறுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் பெறப்பட்ட பின்னர் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஸ்ரீகாந்தாவின் எச்சரிக்கைக்குள் புதையுண்டுள்ள யதார்த்தங்கள்

கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் இடித்து அழிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் அரசுக்கு அழுத்தம் கொடுத்துப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்குக் கூட்டமைப்புத் தவறினால், கூட்டமைப்பின் நாள்கள் எண்ணப்படும் நிலைமை தவிர்க்க முடியாதது என்று எச்சரித்திருக்கின்றார் ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா.

கூட்டமைப்பின் மூன்று கட்சிகளில் ஒன்றான ரெலோ விடமிருந்து – அதன் செயலாளர் நாயகத்திடம் இருந்து – இந்த எச்சரிக்கை வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்தான் பிரதமர் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு இன்று உயிர் பிழைத்து நீடிக்கின்றது என்பது அப்பட்டமான உண்மை.

அண்மையில் ரணிலின் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் அரசு அருந்தப்பில் தப்பிப் பிழைத்தமை மூலம் இந்த விடயம் தெட்டத் தெளிவாகியிருக்கின்றது. அன்றைய நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து – ரணிலின் அரசுக்கு எதிராக – தமிழ்க் கூட்டமைப்பு வாக்களித்திருக்குமானால் ரணிலின் அரசு ஒரு மேலதிக வாக்கினால் தோற்கடிக்கப் பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கும்.

அந்த அரசைக் காப்பாற்றி அதற்கு உயிர் கொடுத்து வைத்திருப்பதே தமிழ்க் கூட்டமைப்புத்தான்.

அப்படிப்பட்ட வலிமையான நிலையில் இருக்கும் கூட்டமைப்பினால் கன்னியா வெந்நீரூற்றுக்குக் கோயில் சர்ச்சை போன்ற விடயங்களில் கூடத் தமிழருக்கு நீதி பெற்றுக் கொடுக்க முடியாவிட்டால், அத்தகைய அரசைக் கூட்ட மைப்பு காப்பாற்றி என்ன பயன்? ஏன் அத்தகைய அரசைத் தமிழ்க் கூட்டமைப்பு காப்பாற்ற வேண்டும்? – என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

அப்படித் தமிழர்களின் உடனடி – அவசர – அவசிய நெருக்கடியைக் கூடத் தீர்த்து வைக்கும் லாயக்கற்ற அர சுக்கு முண்டு கொடுக்கும் கூட்டமைப்பு என்ற கட்டமைப்புத் தேவையா – அவசியமா – எனும் தொனியில் ரெலோ செய லாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா கேள்வி எழுப்புகின்றமையும் கூட நியாயமானதுதான்.

ரணிலின் அரசுடன் சகவாசம் வைக்கும்போது மிகுந்த கவனமாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். நுட்பத்துடன் விடயங்களைக் கையாளவேண்டும்.

ரணிலின் அரசுடன் நீண்ட கால பேச்சுக்களையும் அமைதி முயற்சிகளையும் முன்னெடுத்த விடுதலைப் புலிகளின் பட்டறிவுப் பாடம் இதுதான்.

ஒரு புறம், விடுதலைப் புலிகளுடன் சமதானப் பேச்சுக்களை நடத்திக் கொண்டு – உள்ளக சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தமிழருக்கு சுயாட்சி கொண்ட தீர்வை வழங்குவதற்குத் தயார் என்று உறுதியளித்தபடி – மறுபுறம், விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கு 'சர்வதேச வலைப் பின்னல்' என்ற பெரும் பொறியை விரித்தவர் ரணில் விக்கிரமசிங்க.

அத்தகையவருக்கு தமிழ்க் கூட்டமைப்பைத் தனது வலையில் வீழ்த்தி, தமிழர்களின் காலாதி கால உரிமைக் கோஷங்களைப் பூண்டோடு அழிப்பதற்குத் திட்டம் வகுத்துச் செயற்படுத்துவது, அவ்வளவு தூரம் கஷ்டமான காரியமே அல்ல.

அதைத்தான் அவர் செய்து கொண்டிருக்கிறார் போலும்.

*"தொல்லியல் திணைக்கள அதிகாரப் பிரபுக்கள் இன வெறியுடன் – பேரினவாத மேலாண்மைத் திமிருடன் – செயற்படுகின்றார்கள். அவர்களை, அவர்கள் விருப்பம் போல ஆடவிட்டு, சிங்கள – பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு (ரணிலின்) அரசும் மறைமுக ஆதரவைத் தந்தே நிற்கின்றது."* – என்ற சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவின் குற் றச்சாட்டு மறுக்கப் பட முடியாத உண்மை.

*"இன்னும் இரண்டு வருடத்துக்குள் இனப் பிரச்சினைக் கான தீர்வு"* – என்ற ரணிலின் கடைசி உறுதிமொழி கூட, இந்த விஸ்தாரமான – சிங்கள இனவாத ஆட்சியை நிலை நிறுத்தும் – கபட எண்ணப்படிமத்தின் சில படிநிலை மட்டங்கள்தாம்.

*" இரண்டு ஆண்டுகளில் அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்ற ரணிலின் அரசின் அறிவிப்புக்கூடக் காலத்தைக் கடத்தும் வேலைதான்."* – என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா குறிப்பிடுகின்றார். அதுவும் உண்மையே.

ஒருபுறம் தமிழரின் அரசியல் தலைமையைத் தனது கட்டுக்குள் வைத்துக் கொண்டு, உரிமைகளுக்கான தமிழர்களின் போராட்டம் வீறு கொண்டு எழாமல் கட்டுப்படுத்திய படி, மறுபுறம் முப்படைகள், பொலிஸ், பௌத்த சிங்கள தீவிரவாத அமைப்புகள், தொல்லியல் திணைக்களம், வனபரிபாலன திணைக்களம் போன்றவை மூலம் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, கபளீகரம் செய்து, தமிழர் தாயகத்தைச் சிதைத்தழிக்கும் தனது கபடத் திட்டத்தை சத்தம் சந்தடியின்றி ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து முன்னெடுக்கின்றாரோ என்ற நியாயமான சந்தேகம் தமி ழர்களுக்கும், ஸ்ரீகாந்தா போன்ற தமிழ் அரசியல் தலை வர்களுக்கும் எழுவது தவிர்க்க முடியாததே.

பிரதமர் ரணிலுக்கும் அவரது அரசுக்கும் உரிய அழுத்தத்தைக் கொடுத்து, நியாயத்தை நிலைநிறுத்தச் செய்வது ரணிலின் அரசுக்கு முண்டு கொடுக்கும் கூட்டமைப்பின் கட்டாய கடப்பாடு ஆகும்.

# ஆசிரியர்களின் போராட்டம் தோல்வியில் முடிந்துள்ளது

## கூறுகிறார் ஜோசப் ஸ்டாலின்



கொழும்பு, ஜூலை 19

இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட சுகவீன விடுமுறைப் போராட்டம் தோல்வியடைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அனைத்து ஆசிரியர்கள் சங்கமும் ஒன்றிணைந்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்திருந்த நிலையில், இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்வாறான பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டு அனைத்து ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையைக் காட்டிக்கொடுத்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இலங்கை ஆசிரியர்கள் சங்கமானது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்த ஒரு தொழிற்சங்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில், ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பெரிய வேலைநிறுத்த போராட்டமொன்றுக்கு நாங்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வந்த நிலையில், நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டவர்கள், ஒட்டுமொத்த ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளைக் காட்டிக்கொடுத்துவிட்டனர்.

அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்த நிலையில், இவர்கள் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையச் செயற்பட்டுள்ளனர்.

நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட ஆசிரியர் தொழிற்சங்கமானது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்த ஒன்றாகும். இது தொடர்பில் நாங்கள் தேடியபோது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ போன்றவர்கள் கூட இது தொடர்பில் அறிந்திருக்கவில்லை.

தமது பலத்தினை கட்டியெழுப்புவதற்காக அக்கட்சியில் உள்ள சிலரது ஆதரவுடன் இவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். நாங்கள் எமது நடவடிக்கையில் உறுதியாக உள்ளோம். இந்த அரசின் செயற்பாட்டில் நாங்கள் அதிருப்தியில் உள்ளோம். அனைத்து ஆசிரியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் நோக்கில் உள்ளனர்.

நாங்கள் எமது போராட்டத்தை எதிர்காலத்தில் நிச்சயமாக முன்னெடுப்போம். நேற்றைய தினம் வழமையான பாடசாலை நடவடிக்கைகள் இடம்பெற்றதாகவே நான் நினைக்கின்றேன். – என்றார். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு அடுத்த மாதம் முதல் 50 ரூபா!

## அமைச்சர் மனோ தகவல்

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு அடுத்த மாதம் முதல் 50 ரூபா நாளாந்த மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவித்த தேசிய சகவாழ்வு, அரச கரும மொழிகள் மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன், மலையக மக்களை, தேசிய நீரோட்டத்தில் இணையவிடாமல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தடுத்ததாகவும் குற்றம் சுமத்தினார்.

தேசிய தொலைக்காட்சியில் நேற்று முன் தினம் பின்னிரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினர் மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைய விடாமல் தடுத்தனர். அது ஒரு பாவச் செயலாகும். மக்களை ஓர் அறைக்குள் வைத்து மூடி, திறப்பை தம்வசம் வைத்துக் கொண்டது போல, வாக்குகளுக்காக பயன்படுத்திக் கொண்டு, தேர்தல் காலங்களில் பிரதான கட்சிகளுடன் பேரம் பேசி, பெற வேண்டியதை பெற்றுக் கொண்டார்கள். நாங்கள் அவ்வாறு அரசியல் வியாபாரம் செய்யவில்லை. இப்போது நாம் அந்தக் கதவுகளை உடைத்துள்ளோம்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் நாம் அறிவோம். அரசிடம் நாம் கேட்டுக் கொண்ட 50 ரூபா நாளாந்த மேலதிகக் கொடுப்பனவு அடுத்த மாதத்திலிருந்து வழங்கப்படும். அது தொடர்பில் தீர்மானம் மேற்கொண்டுள்ளோம். ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையும் வழங்கப்படும். இந்தத் தொகை வழங்கப்பட வேண்டிய பொறிமுறை பற்றியே ஆராய்ந்து வருகிறோம்.

ஆயிரம் ரூபா சம்பளம் என்பது இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் அறிவிக்கப்பட்டதாகும். தற்போது தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளும் சம்பளம் போதுமானதல்ல. அதனை அதிகரிக்க பெருந்தோட்டத் துறை மறுசீராக்கம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன – என்றார்.

இதேவேளை, திருகோணமலை கன்னியா பிரச்சினைக்கு விரைவில் உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் அந்த நிகழ்ச்சியின்போது குறிப்பிட்டார்.

வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் பேசுவோருக்கிடையில் எழுதப்படாத ஒப்பந்தம் காணப்படுவதாகவும், மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டுவதே அவர்களது தொழிலாக இருக்கிறது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இனவாதம் பேசுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசுடனான எதிர்காலப் பயணம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் மனோ கணேசன்,

நல்லாட்சி அரசில் ஏராளமான காத்திரமான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவ்வப்போது இடம்பெறும் சிறு தவறுகளைப் பெரிதுபடுத்திப் பேசும் சிலர், மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்களைச் செய்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரை 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு தேசிய நல்லிணக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்வேன். நான் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் நாடோடி போல் சென்று, இரவு பகல் பாராமல் பணியாற்றுகிறேன். நாம் ஊடக நிறுவனங்களுக்கு எதிராகச் செயற்படவில்லை, அங்கு குண்டுத்தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை. பத்திரிகையாளர்களை கொலைசெய்யவுமில்லை எனத் தெரிவித்தார். (ஐ)

### நாளை

20.07.2019
சனிக்கிழமை
நட்சத்திரம்: சதயம் முழுவதும்
திதி : திருதியை மு.ப 8.27 வரை
இராகுகாலம் : 9.01 – 10.31
சுப நேரம் : 3.01 – 4.31

# அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது கன்னியாவை மீட்க உழைப்போம்!

## அழைக்கிறார் சித்தார்த்தன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், ஜூலை 19 திருகோணமலை மாவட்டத்தின் கன்னியாவில் மதத் தலைவர் மற்றும் ஆலய உரிமையாளர் மீது மேற்கொள்ளப்பட்ட காடைத்தனமான தாக்குதல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்திருக்கும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது கன்னியாவை மீட்டு எங்கள் பிரதேசமாக்கத் தொடர்ந்தும் உழைப்போம் என்றார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கன்னியாவில்ஆலயத்துக்குச்சென்ற தென் கைலை ஆதீனம் மீதும் பிள்ளையார் ஆலய உரிமையாளர் கோகிலறமணி அம்மையார் மீதும் காடையர்கள் தேநீர் ஊற்றினர். இதன்போது இவர்களை அழைத்துச் சென்ற பொலிஸாரும் இதனைப் பார்த்துக்கொண்டிருந்ததுடன் இந்த விடயத்தில் எதுவித கவனத்தையும் செலுத்தாமல் அலட்சியப் போக்கில் செயற்பட்டனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆகவே மதத் தலைவர் மற்றும் காணி உரிமையாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களையும் தங்கள் பாதுகாப்பில் வாருங்கள் என அழைத்துச் சென்ற பொலிஸார் இந்த விடயத்தில் எதவித நடவடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்ததையும் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது. அத்தோடு மதத் தலைவர் மீது



அநாகரிகமான முறையில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் எடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்துகின்றோம்.

இந்தக் காடையர்களின் தாக்குதல் மிக மிகக் கண்டிக்கத்தக்கது. இவ்வாறான தாக்குதல்களை அல்லது அச்சுறுத்தல்களை விடுத்து தாம் நினைத்ததை அல்லது விரும்பியதைச் செய்யலாமென்று கருதுகின்றனர்.

ஆனால் தமிழ் மக்களை அச்சுறுத்திஅடிபணிய வைக்கமுடியாது. இவ்வாறான தாக்குதல்களைக் கண்டு பயந்து தமிழ் மக்கள் ஓய்ந்துபோகப் போவதுமில்லை. தமிழ் மக்களின் கன்னியாவை மீண்டும் மீட்டெடுப்போம். அதனை மீண்டும் எங்கள் பிரதேசமாக்குவோம். அதற்காக அனைவரும் தொடர்ந்தும் உழைப்போம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின்போது கன்னியா விவகாரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதாவது கன்னியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பிரதமருக்கு எடுத்துக் கூறி அங்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதற்கமைய பிரதமரும் இந்த விடத்தில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் அமைச்சர் வஜிர அபேவர்த்தனவை அழைத்த பிரதமர், கன்னியா விவகாரம் தொடர்பில் சுமுகமான தீர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பணித்திருந்தார். அதனைத் தொடர்ந்து குறித்த இடத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்குமாறு அமைச்சரினால் திருகோணமலை மாவட்ட அரச அதிபருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த விடயங்கள் அன்றைக்கு நடந்தது உண்மைதான். இவ்வாறான நிலையில் அங்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தமது ஆதிக்கத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது அமைச்சருக்குத் தெரியுமோ தெரியாதோ என்பது தெரியவில்லை. ஆகவே எங்களுக்கு முன்னால் சொன்ன விடயங்களை அமைச்சர் கடைப்பிடிக்கின்றாரா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆக மொத்தத்தில் எங்களிடம் ஒரு கதையையும் அவர்களிடம் இன்னொரு கதையையும் சொல்கின்றனரா என்ற கேள்வி எழுகின்றது – என்றார். (ஐ – 07)

# ஞானசாரதேரர் தமிழர்களை தொடர்ந்தும் சீண்டக்கூடாது

## எச்சரிக்கின்றார் சித்தார்த்தன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழ் மக்கள் தங்களது உரிமையைத் தான் கேட்கின்றனர். அதற்காக சிங்கள மக்களைத் தமிழ் மக்கள் அச்சுறுத்துவதாக அர்த்தம் இல்லை. தமது உரிமையைக் கேட்கும் தமிழ் மக்களைத் தான் ஞானசார தேரர் போன்றவர்கள் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆகவே ஞானசார தேரர் போன்றவர்கள் யாரோ ஒருவரின் அரசியலுக்காகத் தொடர்ந்தும் தமிழ் மக்களைச் சீண்டிக் கொண்டிருக்கக்கூடாது என்பதை தெளிவாகச் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

– இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்

புலிகள் போன்று உறுமிக் கொண்டு திரள்வதையும் சிங்கள மக்களை அச்சுறுத்துவதையும் தமிழ் மக்கள் நிறுத்திக் கொள்ளவேண்டுமென ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

ஞானசார தேரரின் இந்தக் கருத்து குறித்து ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலையே சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புலிகள் அதிகமாக உறுமிக் கொண்டிருக்கவில்லை. இது ஞானசார தேரருக்குத் தெரிய வேண்டும். ஏனெனில் புலி பதுங்கி இருந்து பாயும் என்பதையும் விளங்கிக் கொள்ளவேண்டும். அத்தோடு ஞானசார தேரர் போன்றவர்கள் புலி உறுமுவது என்று சொன்னாலும் புலிகள் நியாயத்திற்காகப் போராடினார்கள். அதேபோன்று நியாயமான போராட்டங்கள் உருவாக வேண்டுமென்றா ஞானசார தேரர் போன்றவர்கள் கேட்கின்றனர்.

ஆகவே போராட்டத்துக்கான தூண்டுதல்களாக அவர்களது பேச்சுக்கள் இருக்கக் கூடாது. இதனை அவர்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் சமாதானமான – நீதியான – நியாயமான தீர்வுகளையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே தேவையில்லாமல் ஞானசாரதேரர் போன்றவர்கள் தமிழ் மக்களைச் சேண்டிக் கொண்டிருக்கக்கூவாது. நாட்டில் ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெற இருக்கின்ற நிலையில் அதற்கான முன்னாயத்த வேலைக்காகவே தமிழ், முஸ்லிம் மக்களைச் சீண்டிக் கொண்டிருக்கின்றார். இவரது இந்தச் செயற்பாடுகள் நாட்டை அழிவுப் பாதைக்கே கொண்டு செல்லும்.–என்றார். (ஐ – 07)

# முறைகேடாக ஈட்டிய நிதியிலிருந்து மங்களவுக்கு லண்டனில் 6 வீடுகள்!

## நீதியாவல தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

நிதி அமைச்சர் மங்கள சமரவீர முறைகேடாகச் சம்பாதித்த கொமிசன் பணத்தினால் லண்டன் நகரில் 6 வீடுகளை விலைக்கு வாங்கியுள்ளார் என சமகி பலவேகய அமைப்பின் தலைவர் நீதியாவல பாலித தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். மங்கள சமரவீர நிதி அமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில் 47 ஆவணங்கள் தம்மிடம் இருக்கின்றன என்றும் தேரர் குறிப்பிட்டார்.

இலங்கை வரலாற்றில் பொது மக்களின் சொத்துக்களைச் சுரண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட முக்கிய நபர்களாக மங்கள சமரவீரவும் அவரது சகாக்களும் காணப்படுகின்றனர் என்றும் தேரர் கூறினார். (ஐ)

# முஸ்லிம் அடிப்படைவாதிகளிடம் பணம் பெறுகின்றனர் பொலிஸார்!

## ஞானசார தேரர் பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 19

இஸ்லாம் அடிப்படைவாதிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு சில பொலிஸ் அதிகாரிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஒதுங்கியிருக்கின்றனர் எனப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றம்சாட்டினார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் தேரர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் சில பொலிஸ் அதிகாரிகள் கோடீஸ்வரர்களாகமாறியுள்ளனர். திருகோணமலையில் இஸ்லாம் அடிப்படைவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய தமிழ் இளைஞன் பொலிஸுக்குச் சென்று முறைப்பாடு செய்தபோது, அதனை தட்டிக் கழித்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

மன்னார் அமைச்சரின் செயலாளர் ஒருவரின் வீட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. அது குறித்து பொலி



ஸார் எந்தப் பதிவையும் செய்யவில்லை. நீதிமன்றத்துக்குச் சென்றபோது சந்தேகநபருக்காக பொலிஸார் பிணை கோருகின்றனர். சட்டத்தரணிகள் தலையில் கை வைத்துக் கொள்கின்றனர். இதுதான் பொலிஸாரின் செயற்பாடு.

விசேடமாக கிழக்கு மாகாணத்தில் இந்த நிலைமை ஆபத்தானது. கிழக்கு மாகாணத்தில் ஷரிஆ சட்டத்தின்படி 22 பேர் புதைக்கப்பட்டுள்ளனர். இதனால், தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபரிடம் விசேட வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றோம்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சகல பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோரை அழைத்து இது தொடர்பில் விளக்கமொன்று அளித்தே ஆகவேண்டும் – என்றார். (ஐ)

# சங்கடஹர சதுர்த்தி விழா

*யாழ். வண். வட கிழக்கு கலட்டி வீர சக்தி விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயக பெருமான் திருவீதி வலம் வருவார். (இ)*

# அமெரிக்காவுடன் சோபா கையெழுத்திடவில்லை

## சட்டத்தரணிகளிடம் ரணில் உறுதி

கொழும்பு, ஜூலை 19

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சோபா உடன்பாடு கையெழுத்திடப்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்துடன் நேற்றுமுன்தினம் நடத்திய சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமெரிக்காவுடன் சோபா உடன்பாடு மற்றும் ஏனைய உடன்பாடுகள் தொடர்பான பேச்சுக்கள் குறித்து, பிரதமரிடம் சட்டவாளர் சங்கம் விளக்கம் கோரியிருந்தது.

இந்தப் பேச்சுக்களில் அமைச்சர்கள் திலக் மாரப்பன, தலதா அத்துக்கோரள ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மன்னிப்புக் கோர ரஞ்சன் நிபந்தனை

கொழும்பு, ஜூலை 19

என்னிடம் இதுவரை யாரும் மன்னிப்புக் கோருமாறு வேண்டவில்லையெனவும், மூன்று பீடங்களினதும் முக்கிய தேரர்கள் யாராவது தன்னுடைய குற்றச்சாட்டு தவறானது எனத் தெரிவித்து அதற்காக மன்னிப்புக் கோரவேண்டும் எனக் கேட்டால் தான் மன்னிப்புக் கோருவார் என்றும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.



நேற்று முன் தினம் அலரி மாளிகைக்குச் சென்று பிரதமரைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.


வெட்டுவதாகவும், கொலை செய்வதாகவும் என்னை அச்சுறுத்தும் காவியுடை தரித்தவர்களிடம் சென்று என்னால் மன்னிப்புக் கோர முடியாது. இவ்வாறான பிக்குகள் உண்மையான பௌத்த பிக்குகள் அல்லர். இவர்கள் ஐ.ஆர்.சி. காரர்கள். இவர்களின் முதுகுகளில் பச்சை குத்தப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# பஸ்ஸூம் காரும் நேருக்கு நேர் மோதல் விழுப்புரம் விபத்தில் 9 பேர் உயிரிழப்பு!

விழுப்புரம் கள்ளக்குறிச்சி அருகே தனியார் பஸ்ஸூம் காரும் நேருக்கு நேர் மோதி கொண்ட விபத்தில் 9 பேர் பலியானார்கள். ஐந்து பேர் வரை படுகாயமடைந்தனர்.

சென்னை நோக்கி வந்த பஸ்ஸூம், காங்கேயம் நோக்கி சென்ற காரும் ஏமப்போர் என்ற இடத்தில் நேற்று அதிகாலை 3மணியளவில் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இந்தக் கோர விபத்தில் சிக்கி 9 பேர் பலியாகினர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகள் நடைபெற்றுவருகின்றன எனவும், காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.






## உளவாளி என்ற குற்றச்சாட்டில் இந்தியருக்குப் பாக். விதித்த மரணதண்டனையை நிறுத்துமாறு சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு

**ஹேக், ஜூலை19 இந்தியக் கடற்படையின் ஓய்வு பெற்ற அதிகாரியான குல்பூண் ஜாதவுக்கு பாகிஸ்தான் விதித்த மரண தண்டனையை சர்வதேச நீதிமன்றம் நிறுத்தி வைத்துத் தீர்ப்பு அளித்தது.இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரி குல்பூண் ஜாதவ் (வயது 49). இவர் இந்திய கடற்படையில் பணிபுரியும் அதிகாரி என்றும், தங்கள் நாட்டில் உளவு வேலை பார்த்தார் என்றும் பாகிஸ்தான் அபாண்டமாக பழி சுமத்தி, 2016 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 3 ஆம் திகதி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.**


இது குறித்த தகவலை இந்தியாவுக்கு 22 நாள்கள் கழித்து தெரிவித்தது.

ஆனால் குல்பூண் ஜாதவ், இந்திய கடற்படையின் ஓய்வு பெற்ற அதிகாரி, ஈரானில் வர்த்தகம் செய்து வந்தார்; அவரை பாகிஸ்தான் முகவர்கள் கடத்தி வந்து இந்த பழியை அபாண்டமாக சுமத்துகின்றனர் என இந்தியா கூறியது.

இருப்பினும் குல்பூண் ஜாதவ் மீதான வழக்கை பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் அவசர கோலத்தில் விசாரித்து, அவருக்கு மரண தண்டனை விதித்து 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தீர்ப்பு வழங்கியது.

இந்தத் தீர்ப்பால் அதிர்ந்து போன இந்தியா, அதே ஆண்டின் மேமாதம்8ஆம்திகதி,நெதர்லாந்து நாட்டின் ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தை நாடியது.

ஜாதவை தூதரக ரீதியில் சந்திக்க அனுமதிக்காமல், 1963 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தூதரக உறவு தொடர்பான வியன்னா



உடன்படிக்கை விதிகளை பாகிஸ்தான் மீறுகிறது என இந்தியா குற்றம்சாட்டியது.

இந்தியாவின் சார்பில் மூத்த வக்கீல் ஹரீஷ் சால்வே ஆஜராகி வாதாடினார். அதைத் தொடர்ந்து குல்பூண் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இந்த வழக்கின் தீர்ப்பு வரும்வரை நடைமுறைப்படுத்த தடை விதித்து பாகிஸ்தானுக்கு சர்வதேச நீதிமன்றம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் உத்தரவு பிறப்பித்தது.

தொடர்ந்து வழக்கின் விசாரணை நடந்து வந்தது. கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி நீதிபதிகள் தீர்ப்பை நேற்றுமுன்தினம் ஒத்திவைத்தனர்.

அதன்படி சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள், குல்பூண் ஜாதவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நிறுத்தி வைத்து நேற்றுமுன்தினம் அதிரடி தீர்ப்பு அளித்தனர். மேலும், அவர் மீதான தண்டனையை மறுஆய்வு செய்யவும் பாகிஸ்தானுக்கு உத்தரவிட்டனர். இந்த தீர்ப்பை சர்வதேச நீதிமன்றின் தலைமை நீதிபதி அப்துல் காவி அகமது யூசுப் வாசித்தார்.

16 நீதிபதிகள் கொண்ட அமர்வில் 15 நீதிபதிகள் இந்த தீர்ப்பை ஒரு மனதாக அளித்தனர். ஒரு நீதிபதி மட்டுமே எதிரான நிலையை எடுத்துள்ளார். எனவே பெரும்பான்மை தீர்ப்பு நடைமுறைக்கு வரும்.

குல்பூண் ஜாதவுக்கு தூதரக நீதியிலான தொடர்புக்குக் கூட வாய்ப்புத் தராமல் பாகிஸ்தான் வியன்னா உடன்படிக்கையின் பிரிவு 36(1) ஐ மீறி உள்ளதாக சர்வதேசநீதிமன்றம்தனதுதீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றின் இந்தத் தீர்ப்பு பாகிஸ்தானை கட்டுப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த தீர்ப்பை இந்தியா வரவேற்றுள்ளது.

இந்தத் தீர்ப்பை, குல்பூண் ஜாதவின் சொந்த ஊரான மராட்டிய மாநிலம், சதாரா மாவட்டம், ஜாவ்லி கிராம மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அவரை பாகிஸ்தான் சிறையில் இருந்து உடனடியாக விடுதலை செய்து கொண்டு வருவதற்கு இந்தியா அழுத்தம் தர வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

## சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்கின்றார் பாக். பிரதமர்



**இஸ்லமாபாத்,ஜூலை19**

**குல்பூண் ஜாதவை விடு தலை செய்ய மறுத்து சர் வதேச நீதிமன்றம் வழங் கிய தீர்ப்பை வரவேற்பதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள் ளார்.**

**இம்ராண் கான் வெளி யிட்டுள்ள டுவிட் பதிவில், குல்பூண் ஜாதவை விடுதலை செய்ய வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் சொல்லவில்லை, சர்வ தேச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை வரவேற்கிறோம். சட்டத்தின் படி இந்த விவகாரத்தை கையாள்வோம் – என்று தெரிவித்துள்ளார்.**

## ‘சந்திரயான் – 2’ விண்கலம் திங்கள் விண்ணுக்கு பாயும்

ஹரிகோட்டா: சந்திராயன் – 2 விண்கலம் ஜூலை 22 ஆம் திகதி விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ அதிகாரபூர்வமாக தகவல் தெரிவித்துள்ளது.

நிலவின் தென்துருவ பகுதிகளை ஆய்வு செய்ய சந்திராயன் – 2 விண்கலம், ஜூலை 15 ஆம் திகதி அதிகாலை 2.51மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவாண் ஏவுதளத்தில் இருந்து ஏவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கான 20 மணி நேர கவுண்ட்டவுன் ஞாயிறு காலை 6.51மணிக்குத் தொடங்கியது.




சுமார் 44 மீற்றர் உயரம் கொண்ட 640 டன் ரொக்கெட் ஜி.எஸ்.எல்.வி – எம்.கே III, விண்கலத்தை செலுத்த தயாராக நிறுத்தப் பட்டது. ‘பாகுபலி’ என்று கூறப்படும் இந்த ரொக்கெட், 3.8டன்எடையுள்ள சந்திராயன் – 2 விண்கலத்தை சுமக்கப்போகிறது என்பதால் இந்த செல்லப் பெயரைப் பெற்றது. இதிலுள்ள லேண்டர் ‘விக்ரம்’ செப்ரெம்பர் 6 ஆம் திகதி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கும் என்று கூறப்பட்டது. முதல் முறையாக நிலவின் தென்துருவம் பகுதியில் ஆய்வு நடத்தும் நோக்கத்தில் சந்திராயன் – 2 விண்கலம் செலுத்தப்பட இருந்ததால், உலக நாடுகள் அனைத்துமே இந்த மினை உற்று நோக்கின.

இந்நிலையில்தான், கவுன்ட் டவுன் நிறைவடைய இருந்த 56 நிமிடங்கள், 24வது வினாடியில், திடீரென நிறுத்தப்பட்டு சந்திராயன் – 2 ஏவப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. கிரையோஜெனிக்கில் எரிபொருள் ஏற்றப்படும் போது, 1 மணி நேரத்துக்கு முன்னதாக தொழில்நுட்பக் கோளாறு கண்டறியப்பட்டது. இதையடுத்து இந்த கோளாறு குறித்து சில மதிப்பீடுகளை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது என்றும் முதலில், ரொக்கெட்டில் ஏற்றப்பட்ட எரிபொருளை காலி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, சந்திரயான் – 2 விண்கலத்தை ஏவும் ரொக்கெட்டில் ஏற்பட்ட கோளாறு மிக, மிக சிறிய கோளாறுதான் என்றும் அந்த கோளாறு ஓரிரு நாட்களில் சரி செய்யப்பட்டு விடும் என்றும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்திராயன் – 2 விண்கலம் ஜூலை 22 ஆம் திகதி ஏவப்படும் என இஸ்ரோ அதிகாரபூர்வமாக தகவல் தெரிவித்துள்ளது. இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள இஸ்ரோ, தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஏவப்படுவது நிறுத்தப்பட்ட சந்திராயன் 2 விண்கலம் ஜூலை 22 ஆம் திகதி (திங்கட்கிழமை) நள்ளிரவு 2:43 மணிக்கு விண்ணில் ஏவப்படும் எனத் தெரிவித்துள்ளது.

## வான் கவிழ்ந்ததில் 6 பயணிகள் சாவு!

தமிழ்நாடு கருங்குளம் பகுதியில் வான் ஒன்று கவிழ்ந்ததில் 6 பேர் பலியானார்கள்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அடுத்த திருத்தங்கல் கிராமத்திலிருந்து பயணிகள் வான் ஒன்று திருச்செந்தூர் நோக்கி சென்றது. அது நேற்று அதிகாலை 1.30 மணியளவில் திருநெல்வேலி – திருச்செந்தூர் வீதியில் கருங்குளம் என்ற இடத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் வானில் பயணம் செய்த 6 பேர் பலியானார்கள். மேலும் 11 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜெகதீஸ்வரன், அருணாசலம், முத்துலட்சுமி, பாக்யலட்சுமி, நித்தீஷ், அனீஸ்பாண்டி (குழந்தை) ஆகியோரே விபத்தில் பலியானவர்கள். இவர்கள்



திருத்தங்கல் இந்திராநகர் பாண்டியன் நகர் 6 ஆவது தெருவை சேர்ந்தவர்கள் என பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்துள்ளது.

# நேபாளத்தில் தொடரும் மழையால் 83 பேர் சாவு: 31 பேரைக் காணோம்

காத்மாண்டு,ஜுலை19

நேபாளத்தில் கனமழையால் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

நேபாள நாட்டில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் வெள்ளம் பெருக்கெடுத்து சாலைகளில் ஓடுகிறது. வீடுகள் மற்றும் குடியிருப்புகளையும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டு உள்ளது.



அந்நாட்டில் 25க்கும் மேற்பட்ட மாவட்டங்கள் மற்றும் 10 ஆயிரத்து 385 வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இதனால் பல நகரங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்து உள்ளது. பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே செல்ல முடியாத சூழ்நிலையும் எழுந்துள்ளது. இதனால் அவர்களை மீட்கும் பணியில் மீட்பு படையினர் மற்றும் காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து நீர்சார்ந்த நோய்களான வயிற்றுப்போக்கு, டைபோய்ட், ஹெபாடைடிஸ் மற்றும், போன்ற நோய்கள் பரவக் கூடும் எனச் சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். தொடர்மழையால் பாதிப்படைந்து உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு முறையான சுகாதார சேவைகளை உறுதி செய்யும் வகையில், நீரால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கான சாத்திய நடவடிக்கைகளை மேற்கொள்ள சர்வதேச அமைப்புகளின் உதவியை அந்நாட்டு அரசு கோரியுள்ளது.

இந்நிலையில், அந்நாட்டு உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில், தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதுவரை 88 பேர் பலியாகி உள்ளனர். 31 பேரை இன்னும் காணவில்லை. 41 பேர் காயமடைந்தனர். அவர்களில் 30 பேர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டனர். நாடு முழுவதும் 3,366 பேர் மீட்கப்பட்டு உள்ளனர் என தெரிவித்து உள்ளது.

# எமிரேட்ஸ் எண்ணெய்க் கப்பல் ஹோர்முஸ் நீரிணையில் மாயம்

## வளைகுடாப் பிராந்தியத்தில் பதற்றம்



தெஹ்ரான்,ஜுலை19

ஹோர்முஸ் ஜலசந்தி (நீரிணை) வழியாகச் சென்றுகொண்டிருந்த ஐக்கிய அரபு அமீரகத்தின் (எமிரேட்ஸ்)எண்ணெய் கப்பல் திடீரென மாயமானமை பாரசீக வளைகுடாப் பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஈரான் – அமெரிக்கா இடையேயான மோதல் காரணமாக பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் தொடர்ந்து பதற்றமான சூழல் நீடித்து வருகிறது. கடந்த மே மாதம் பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெளிநாட்டு எண்ணெய் கப்பல்கள் மீது தொடர்ச்சியாக நாசவேலை தாக்குதல் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலின் பின்னணி அறியப்படாத நிலையில், ஈரான்தான் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்தது. ஈரான் அதனை திட்டவட்டமாக மறுத்தது.

இந்தநிலையில், ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக சென்றுகொண்டிருந்த ஐக்கிய அரபு அமீரகத்தின் எண்ணெய் கப்பல் ஒன்று திடீரென மாயமானது பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

டுபாயில் இருந்து புஜைரா துறைமுகம் நோக்கி சென்று கொண்டிருந்த ரியா எனப்படும் அந்த எண்ணெய் கப்பல் கடந்த சனிக்கிழமை இரவு மாயமானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அரபு அமீரகத்தின் எண்ணெய் கப்பலை ஈரான் கைப்பற்றி இருக்கலாம் என சந்தேகிப்பதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஈரான் உடனடியாக எந்தக் கருத்தும் தெரிவிக்க வில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டின் பிரிட்டிஷ் ஹெரிட்டேஜ் எண்ணெய் கப்பலை ஈரான் இராணுவத்துக்குச் சொந்தமான படகுகள் கைப்பற்ற முயற்சித்தன என அமெரிக்கா குற்றம் சாட்டியதும், ஈரான் அதனை மறுத்ததும் நினைவுகூரத்தக்கவை.

# பணக்காரர்களின் பட்டியலில் பின்தள்ளப்பட்டார் பில்கேட்ஸ்

## இப்போது மூன்றாம் இடத்தில் அவர்



நியூயோர்க்,ஜுலை19

உலகின் பணக்காரர்கள் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருந்து பில்கேட்ஸ் 3 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்.

உலகின் பெரும்பணக்காரர்களின் பட்டியலை புளூம்பெர்க் நிறுவனம் வெளியிட்டு வருகிறது. அதில் பல ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்த பில்கேட்ஸை, அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் ஏற்கனவே பின்னுக்குத்தள்ளி முதலிடம் பிடித்தார்.

இந்நிலையில் பிரான்ஸின் எல்.வி.எம்.எச்., நிறுவனத் தலைமைச் செயலதிகாரி பெர்னார்ட் அர்னோல்ட், 2 ஆம் இடத்தில் இருந்த மைக்ரோ சொவ்ட் நிறுவுநர் பில் கேட்ஸைப் பின்னுக்குத் தள்ளியிருக்கிறார் என புளூம் பெர்க் கூறியுள்ளது.

தற்போதும் அமேசான் நிறுவுநர் ஜெப் பெசோஸ் 125 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் முதலிடத்திலும், 108 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் பெர்னார்ட் 2 ஆம் இடத்திலும், 107 பில்லியன் டொலர் சொத்துக்களுடன் பில்கேட்ஸ் 3 ஆம் இடத்திலும் உள்ளனர். பில்கேட்ஸ் தனது அறக்கட்டளைக்கு 35 பில்லியன் டொலரை நன்கொடையாக வழங்காவிட்டால் அவரே முதலிடத்தில் நீடித்திருப்பார் என புளூம்பெர்க் சுட்டிக்காட்டியுள்ளது.



# முப்பரிமாண வடிவங்களிலும் பச்சை குத்திக் கொள்ளலாம்



இங்கிலாந்தில் முப்பரிமாண (3டி) முறையில் 'டாட்டூ' எனப்படும் பச்சைகுத்துதல் அதிகரித்து வருகிறது.

தற்போதைய இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களிடம் பச்சைகுத்திக் கொள்ளும் பழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பெரும்பாலானவர்கள் குறிப்பிட்ட சில இடங்களில் பச்சை குத்திக் கொள்ளும் நிலையில் ஒரு சிலர் உடல் முழுவதும் பச்சை குத்திப்படங்களை வரைந்து கொள்கின்றனர். இந்நிலையில் பச்சைகுத்துதலின் அடுத்த நிலையாக முப்பரிமாண முறையில் படங்கள் வரையப்படுகின்றன.

வெஸ்ட் யார்க்சையர் என்ற இடத்தைச் சேர்ந்த சோலோவிவோவ் என்பவர் தனது வாடிக்கையாளர் ஒருவரின் பின் கழுத்துப் பகுதியில் சிலந்தி ஒன்று நிற்பதுபோல முப்பரிமாண வடிவத்தில் பச்சைவரைந்துள்ளார். பார்ப்பதற்கு உயிருள்ள சிலந்தி போலவே இருப்பதால் சோலாவிவோவிடம் பச்சை குத்திக் கொள்ள ஏராளமானோர் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுள்ளனர்.

# துருக்கிக்கு எவ் – 35 போர் விமானங்களை வழங்கும் திட்டத்தைக் கைவிட்டது அமெ.

துருக்கி நாட்டிற்கு F – 35 போர் விமானங்களை விற்பனை செய்ய போவதில்லை என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

துருக்கி நாட்டின் வான் பரப்பை பாதுகாக்கும் வகையில் ரஷ்யாவிடம் இருந்து அதிநவீன S – 400 ஏவுகணைத் தடுப்புக் கருவிகளைக் கொள்முதல் செய்ய அந்நாட்டு அரசு ஒப்பந்தம் செய்தது.

இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்த அமெரிக்கா, F – 35 ரக போர் விமானத் தயாரிப்பு தொடர்பாகத் தொழில்நுட்பப் பயிற்சி பெற அமெரிக்கா வந்திருக்கும் துருக்கி விமானிகளை வெளியேற்றுவோம் என எச்சரித்திருந்தது.

இருப்பினும், ஒப்பந்தப்படி ரஷ்யாவிடம் இருந்து S – 400 ஏவுகணை தடுப்புக் கருவிகளில் முதல் தொகுதியை அண்மையில் துருக்கி அரசு பெற்றுக் கொண்டது. இந்நிலையில் இது குறித்து வெள்ளை மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்த அதிபர் டிரம்ப், பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.



அப்போது, துருக்கி S – 400 ஏவுகணைகள் தடுப்புக் கருவிகளை வாங்கியமை முற்றிலும் நியாயமற்ற செயல் எனவும், இதனால் இருநாடுகளுக்கும் இடையேயான உறவு தற்போது கடினமான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் துருக்கிக்கு அதிநவீன F – 35 ரக போர் விமானங்களை விற்பனை செய்யும் ஒப்பந்தத்தை கைவிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# இனிவரும் தேர்தலில் முக்கிய இடம்பிடிக்கவுள்ள மத அரசியல்!

அமெரிக்க அரசியலில் செல்வாக்கு மிக்க சிந்தனை குழுக்களில் ஒன்றான The Heritage Foundation என்ற அமைப்பு, இந்த ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதியிட்ட, சிறிலங்காவின் அரசியல் நிலைமை குறித்து மிக விவரமான ஓர் அறிக்கையை தயாரித்திருந்தது.

இந்த அறிக்கை முன்னாள் அதிபர் ராஜபக்சவை முதன்மைப்படுத்துவதாகவும் ராஜபக்ஷ குடும்பமே, இந்த வருட இறுதியில் நாட்டின் உயர் பதவியை ஏற்க வல்லதாக இருக்கும் என்பது, அந்த அறிக்கையின் சாராம்சமாகும்,

ஆனால், முன்னர் என்றுமில்லாத அமெரிக்க உறவின் வளர்ச்சியை 2017 இல் கண்டதாக குறிப்பிடுகின்ற அந்த அறிக்கை, ஜனநாயகத்தை தரமுயர்த்துவதற்கும், மனித உரிமையையும் அடிப்படை சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும், இருநாடுகளும் சேர்ந்து உழைப்பதாக உறுதி கூறப்பட்டுள்ளது.

அதேவேளை பாதுகாப்பு விவகாரங்களில் திறந்த , சுதந்திரமான இந்தோ – பசுபிக் பிராந்தியம் என்ற பார்வையை அமெரிக்கா கொண்டுள்ளது.

சுதந்திரமான, திறந்த இந்தோ– பசுபிக் பிராந்திய மூலோபாயம் என்ற பெயரில் தேவைக்கு ஏற்ற வகையில் தனது படை களை நகர்த்தக் கூடிய ஓர் ஒப்பந்தத்தை சிறிலங்காவுடன் செய்து கொள்ளமுனை கிறது அமெரிக்கா.

சுதந்திரமான, திறந்த இந்தோ – பசுபிக் பிராந்தியம் என்ற சொல்லாடல் 2017 ஆம் ஆண்டு ஆசிய – பசுபிக் பொருளாதார மாநாட்டில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பினால், பிரயோகிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தனது படைகளையும், கலன்களையும் சிறிலங்கா குடியகல்வு குடிவரவு திணைக்களம், சுங்க திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் சிறிலங்கா அரசியல் எல்லைக்குள் தனியாகவோ, கூட்டாகவோ உட்பிரவேசிக்கவும் வெளியகலவும் வசதியாக இந்த ஒப்பந்தம் அமெரிக்காவுக்குத் தேவைப்படுகிறது.

பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்ட இந்த ஒப்பந்தம், ஏறத்தாழ அமெரிக்காவின் ஒரு மாநிலமாக சிறிலங்கா மாறுவது போன்ற எண்ணப்பாட்டை உருவாக்குவதாக, சில சிறிலங்கா ஆய்வாளர் தரப்பினால் பார்க்கப்படுகிறது.

ஆனால், இது சிறிலங்காவின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இறையாண்மைக்கும் விரோதமான ஓர் ஒப்பந்தம் என்பது சிறிலங்காவின் பார்வையாக உள்ளது.

சிறிலங்காவில் அமெரிக்க சார்பாளராக கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க கூட விரைவில் வர இருக்கும் தேர்தலில் சிங்கள பௌத்த மத தேசியவாதம் முக்கிய இடம்பிடிக்க இருப்பதால், அமெரிக் காவுக்காக விவாதிக்க முடியாத நிலை யில் உள்ளார்.

இதனால் சிறிலங்காவில் இடம்பெறும் மத வன்முறைகளையும் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்புருவாக்கத்தையும் கூட, எந்த அரசியல் கட்சிகளும் நேரடியாக எதிர்த்து நிற்க முடியாத நிலையில் உள்ளன. மத அரசியலே இந்த ஆண்டின் இறுதியில் வரும் தேர்தலில் முக்கிய இடம் பிடிக்க இருக்கிறது.

சிங்கள பௌத்தம் சார்ந்த பெரும்பான்மை ஜனநாயக அரசியலில் வெற்றி



பெறப்போவது அதீத மதவாதமே என்ற தீர்மானமும் கண்டு விட்ட பின்பு, பல்லினத்தன்மை என்பது முற்று முழுதாக மறுக்கப்பட்ட ஒரு தேசமாகவே சிறிலங்கா சென்று கொண்டு இருக்கிறது.

தமிழ் தேசிய இனம் நடத்திய போராட்டங்களை நசுக்க சிறிலங்காவுக்கு உதவிய சர்வதேசம், மேலும் தமது தேசிய நலன் களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பெரும்பான்மை மதவாத சக்திகளை ஊக்குவிக்கும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது,. சிறிலங்காவில் அரச கட்டமைப்பு என்ற பெயரில் மதவாத சிந்தனைகள் மேலும் மேலும் வளர்த்தெடுக்கப்படுகிறது. சட்டஅங்கீகாரம் பெற்று வருகிறது.

உலகில் மத அடிப்படையில் சட்ட அங்கீகாரம் பெற்ற மேற்கு நாடுகளின் ஆதரவுடன் உள்ள நாடுகளான சவூதி அரேபியா, இஸ்ரேல், ஈரான், பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளின் வரிசையில் சிறிலங்காவும் மிக சில வருடங்களில் நிறம் மாற்றப்படும் நிலையுள்ளது.

**சிறிலங்காவிலும் முகவர் யுத்தம்**

சர்வதேச அரங்கில் இன்றைய காலகட்டம் முகவர் யுத்தம் அல்லது பதிலிகள் யுத்த காலகட்டமாக பல்வேறு ஆய்வாளர்களாலும் பார்க்கப்படுகிறது. அதாவது வல்லரசுகள் அவற்றின் செலவுகளை மட்டுப்படுத்தும் வகையில், தமது பிரதிநிதிகள் ஊடாக தமது எதிரி நாட்டிற்கு சேதம் விளைவித்தல் என்பதுடன், நாடுகளை யுத்த நிலையில் ஈடுபட வைத்திருப்பதன் வாயிலாக அரசியல் இலாப நோக்கை எட்டும் போக்கு இந்த யுத்த முறையாகும்.

இந்த யுத்தத்தில் ஈடுபடக் கூடிய அலகுகள் பல்வேறு தேசிய இனங்களையும் மதங்களையும் சார்ந்தவர்களாக நாடுகளுக்கு நாடு பிராந்தியங்களுக்கு பிராந்தியம் வேறுபட்டவைகளாக இருக்கின்றன. இதில் ஒன்று தான் ஐஎஸ் ஐஎஸ் அமைப்பாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஐஎஸ் ஐஎஸ் அமைப்புக்கு, மேற்கு நாடுகளில் இருந்தும் இஸ்ரேலிய, சவூதி அரசுகளிடமிருந்தும் முகவரி தவறாது எவ்வாறு ஆயுத தளபாடங்களும் நிதி உதவியும் பல்வேறு முகவர்களூடாக கொண்டு செல்லப்படுகின்றன என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல ஈரானும், லெபனானில் இருந்து தொழிற்படும் ஹிஸ்புல்லா இயக்கம், தெற்கு யேமனில் போராடும் கவுட்டி படைகள் என பல்வேறு ஷியா இஸ்லாமிய குழுக்களை, சவூதி அரேபியா மீதும் இஸ்ரேலின் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு பயன்படுத்தி வருகிறது.

இதேபோல சிறிலங்காவிலும் இந்த முகவர் யுத்த ஏற்பாடுகள் அந்த நாட்டின் பூகோள அரசியல் தேவைகள் சார்ந்து பல்வேறு மேற்குலக, மத்திய கிழக்கு பிராந்திய, தெற்காசிய பிராந்திய வல்லரசுகளின் வழிநடத்தலில் ஒருசில அரசியல் இலாபம் பெறக்கூடிய அரசியல்வாதிகளின் இணக்கத்துடன் சிறிலங்காவில் தமக்கு சாதகமான அரசியல் நிலைமை ஒன்றை உருவாக்கும் பொருட்டு நடைபெற்று வருகிறது.

இதனை நிரூபிக்கும் வகையில் ஏற்கனவே சீன, அமெரிக்க போட்டியை தனக்குச் சாதகமாக பயன்படுத்தும் பொருட்டு சிறிலங்கா வல்லரசுகளுடனான பேரம் பேசலில் ஈடுபட்டு இருந்தது. இதில் இரு வல்லரசுகளும் சிறிலங்காவில் ஆழ ஊடுருவி சமூக மட்டத்தில் ஆளுமை செலுத்தும் வரைக்கும் சென்றுள்ளன. பல அரசியல் தலைவர்களை தமது தேவைக்கு ஏற்ப மனம் மாற்றவும் முனைந்திருக்கின்றன.

இதில் சிங்கள பௌத்த பேரினவாத தூண்டுதலும் இஸ்லாமிய மதஅடிப்படைவாத சிந்தனைகளும், அதேவேளை முன்பு குறிப்பிட்டது போல ஒரே காலப் பகுதியில் இந்தியாவில் இந்து மதவாத எழுச்சியின் தேவையும் ஒருங்கே இணைவாக ஏற்பட்டதன் காரணமே, சிறிலங்காவில் இஸ்லாமிய மதவாதிகளை கருவிகளாக பயன்படுத்துவதன் தேவை சிறிலங்காவில் ஏற்பட்டு உள்ளது.

**பல்லினத்தன்மை முற்றாக மறுக்கப்பட்ட ஒரு தேசமாக மாறி வருகிறது இலங்கை**

சிறிலங்காவில் இடம் பெற்று வரும் அரசியல் மாற்றங்களை பொறுத்தவரையில் ராஜபக்ஷ குடும்பத்தின் மீள் வரவும், சர்வதேச அளவில் தற்போது எழுந்துள்ள தாராளவாதத்திலிருந்து, ஜனரஞ்சகவாத அரசியல் கோட்பாட்டு எழுச்சியும், கோட்டாபய ராஜபக்ஷவின் வரவும் தவிர்க்க முடியாது என்று அமெரிக்க உணர்ந்துள்ளது.

இதனை வெளிப்படுத்தும் வகைகளில் குண்டு வெடிப்பின் பின்பு மே மாதம் 8ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற ஒரு மாநாட்டில் கலந்து கொண்ட முன்னைநாள் அமெரிக்க தூதுவர் றொபேட் ஓ பிளேக், 2009 ஆம் ஆண்டு முடிவுற்ற ஈழ யுத்தத்தில் பாதுகாப்பு செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, யுத்தசூழலிற்கு ஏற்ப வல்லுனர் குழுவை அமைத்து முடிவுகளை எடுக்கவும் அவற்றை செயற்படுத்தவும் ஒரு வலுவான தேசிய தலைமைக்கு அழைப்பு விடுத்ததாக நினைவு கூர்ந்து புகழ்ந்துரைத்தார்.

அமெரிக்கா தற்பொழுது பெரும்பான்மை அரசியலின் பக்கம் சார்ந்து செயற்பட முயற்சிப்பதையே இது காட்டுகிறது. ஏனெனில் கடந்த யுத்த காலத்தின் போது சிறிலங்காவுக்கு நேரடி ஆயுத உதவி செய்ய முடியாது போனதை இட்டு றொபேட் ஓ பிளேக் கவலையும் தெரிவித்திருக்கின்றமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த பேச்சுகளுக்கு இணங்கி பெரும்பான்மை ஜனநாயக அரசியலில் பதவிக்கு வரும் ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் சிறிலங்காவின் எதிர்காலத்தை மீண்டும் இரத்தக் களரிக்குள் செல்லாது தடுப்பார்களா என்பது தான் கேள்வி.

**- லண்டனில் இருந்து லோகன் பரமசாமி**

# புதுக்குடியிருப்பு அபிவிருத்திக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 19

முல்லைத்தீவு – உடையார்கட்டு பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் காலத்தில் பராமரிக்கப்பட்ட விவசாயப் பண்ணையைத் தொடர்ந்தும் பராமரிக்கவுள்ளதாக அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் பிரதேச செயலகத்தில் நேற்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தின்போதே, மேற்குறிப்பிட்ட விடயம் உள்ளிட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதற்கமைய, புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்குள் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து நீர் பெறுவதன் மூலம் சாதாரண கிணறுகளில் நீர் குறைந்து குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதன் காரணமாக ஆழ்துளைக் கிணற்றுக்கு மாற்றுவழி செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவின் பல இடங்களில் இருந்து மணல் வியாபாரத்திற்காக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. குறிப்பாக உடையார்கட்டு கள்ளியடி பகுதிகளில் இருந்து பெருமளவிலான மணல் கொண்டு செல்லப்படுகிறது. இவை பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னரே கொண்டுசெல்லப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதுடன், மணல் அனுமதியினை தனிநபர்களுக்கு வழங்காமல் அமைப்புகளுக்கு மாத்திரம் வழங்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், பதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் மாகான சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச திணைக்களத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

(ஐ)

## அரச விதைகள் உற்பத்தி பண்ணையில் பெரும் தீ



வவுனியா, ஜுலை 19

விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான வவுனியா அரச விதை உற்பத்திப் பண்ணையில், பெரும் தீ விபத்து ஒன்று நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா ஏ -9 வீதிக்கு அருகாமையில் இருக்கும் இந்த விதை உற்பத்திப் பண்ணை வளாகத்தில் திடீரென ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக வயல் நிலங்கள் தீக்கிரையாகின.

தீப்பரவல் காரணமாக ஏற்பட்ட புகையினால் ஏ - 9 வீதியில் சிறிதுநேரம் பயணத் தடை ஏற்பட்டது.

சிறுபோக அறுவடையின் பின்னரான காலப்பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டதால், பெரிய அழிவுகள் தவிர்க்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா தீயணைப்புப் பிரிவினர், சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (ஐ)

# தாமரை மொட்டுக் கட்சியின் தாளத்துக்கு ஆடவேமுடியாது

## தயாசிறி எம்.பி. திட்டவட்டம்

**கொழும்பு, ஜுலை 19**
**ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் - ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் வரவிருக்கும் தேர்தல்களில் இணைந்து பணியாற்றவேண்டுமானால் இருதரப்பு இணக்கத்துடனேயே இரு கட்சிகளும் ஜனாதிபதி வேட்பாளரைப் பரிந்துரைக்க வேண்டுமெனச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பின் டார்லி வீதியில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.



அவர் மேலும் கூறுகையில் -

பொதுஜன பெரமுன அவர்களாக ஒரு வேட்பாளரை நியமித்து எமது ஆதரவைக் கேட்டால் எமது கட்சி வேறு முடிவை எடுக்க வேண்டியிருக்கும். அவர்கள் கூறும்படியெல்லாம் செயலாற்ற நாம் தயாரில்லை. தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைகளையே ரணில் செய்கிறார். அரசியல் தீர்வு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கருத்து தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ள செய்யப்பட்ட அறிவிப்பாகும். - என்றார் தயாசிறி.

## அமெரிக்க - சீனப் போட்டிக்கு நாட்டை பலியாக்க முடியாது

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 19

அமெரிக்க - சீன முரண்பாடுகளுக்கு நாட்டைப் பலியாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் -



அமெரிக்கா ஆசிய நாடுகளில் நிரந்தர ஆதிக்கம் செலுத்தும் திட்டங்களைத் தற்போது வகுக்கின்றது. சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் பெரும்பொருளாதார போட்டித்தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் எமது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒப்பந்தங்களை அமெரிக்காவுடன் அரசு செய்துகொள்வது எதிர்காலத்தில் நாட்டை பெரிய நெருக்கடிக்குள் கொண்டு செல்லும் - என்றார். (ஐ)

## குடும்பத் தலைவர் விபத்தில் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜுலை 19

மட்டக்களப்பு - ஆயித்தியமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் பண்டாரியாவெளியில் வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தவராசா தற்பரன் (வயது 41) என்பவர் உயிரிழந்தார்.

வவுணதீவு -ஆயித்தியமலை பிரதான வீதியில் முள்ளாமுனை பகுதியில் அந்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை உழவு இயந்திரத்துடன் மோதுண்டதில் விபத்து இடம்பெற்றதாக ஆயித்தியமலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கலாநிதி சி.ரகுராமின் நூல் சிறப்புற வெளியீடு







யாழ்ப்பாணம், ஜுலை 19

நமது ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் தலைவருமான கலாநிதி சி.ரகுராமின் உங்களை எதிர்பார்த்திருக்கிறது சமூகம் என்ற நூல் நேற்று முன் தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நமது ஈழநாடு நாளிதழில் கலாநிதி சி.ரகுராம் ஆசிரியராக இருந்த காலப் பகுதியில் எழுதிய ஆசிரியர் தலையங்களின் தொகுப்பாக உருவாக்கப்பட்ட நூலே வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக நூலக கருத்தரங்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை சிரேஷ்ட ஊடகவியலாளர் அ.நிக்ஸன் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் அறிமுக நிகழ்வு கொல்லப்பட்ட அனைத்து ஊடகவியலாளர் களுக்குமான மௌன அஞ்சலியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொல்லப்பட்ட நமது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளராக இருந்த சி. சிவமகாராஜாவின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தும், தீபம் ஏற்றியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதேயன் நூலை வெளியிட்டு வைக்க அந்த நூலின் முதல் பிரதியை யாழ்.பல்கலைக்கழக தகதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் அறிமுக உரையினை யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கமும், யாழ். ஊடக அமையத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஆ.சபேஸ்வரன் ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்வின் ஏற்புரையை நூலாசிரியர் கலாநிதி ரகுராம் வழங்கினார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பேரவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் ஆறு.திருமுருகன், விரிவுரையாளர்கள், மதத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், ஊடகக் கற்கை பயிலும் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ - 07)

## ரூ. 10 லட்சம் பெறுமதியான தங்கூசி வலை பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பில் சிக்கியது

பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்த 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளை மீட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் அவற்றைக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தினர்.

கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலர்கள், பூநகரி பள்ளிக்குடா கடற்கரையோரத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சோதனை ரோந்து நடவடிக்கையை முன்னெடுத்தனர். அதன்போது சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகள் அவர்களால் மீட்கப்பட்டன.

அந்த வலைகள் தொடர்பில் கடற்றொழிலாளர் சங்கங்களுடன் பேசப்பட்டது. எனினும் வலைகளுக்கு உரிமை கோர எவரும் முன் வராமையால், அதிகாரிகள் அவற்றைக் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். (ஐ)


northern PC Park



வடக்கின் கணினிப் பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388


# றுஹுணு பல்கலைக்கு புதிய வேந்தர் நியமனம்



கொழும்பு, ஜுலை 19

றுஹுணு பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக மேல் மாகாணத்தின் பிரதான மகா சங்கத் தலைவரும் மாளிகாகந்த பிரிவெனாவின் பணிப்பாளருமான பேராசிரியர் அக்குரட்டியே நந்த தேரர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ஐ)

# அரையிறுதிக்குத் தகுதி பெற்றது வட்டக்கச்சி இளந்தளிர் வி.க. அணி



கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியோடு சுடரொளி விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 09 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வட்டக்கச்சி இளந்தளிர் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 02:00 என்ற கோல் கணக்கில் இளந்தளிர் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இளந்தளிர் அணி சார்பாக எட்வின், பன்கஜன் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இளந்தளிர் அணியின் றஜீவன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது ஐ.சி.சி.!

கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த ஒருநாள் கிரிக்கெட் அணி மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு தொடருக்கும் பிறகு, சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

அதன்படி, தற்போது நடைபெற்று முடிந்துள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் பெறுபேறுகளை மதிப்பிட்டு ஒருநாள் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

ஒருநாள் அணிகள் தரவரிசைப் பட்டியலில், இங்கிலாந்து அணி 125 மதிப்பீட்டு புள்ளிகளுடன் முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்தியா அணி, 122 மதிப்பீட்டு புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து அணி 112 மதிப்பீட்டு புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆஸ்திரேலியா அணி 111 மதிப்பீட்டு புள்ளிகளுடன் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்கா அணி, 110 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி 97 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் நீடிக்கின்றது.

பங்களாதேஷ் அணி 90 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் நீடிக்கின்றது.

இலங்கை அணி 79 மதிப்பீட்டு புள்ளிகளுடன் எட்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணி 77 மதிப்பீட்டு புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி 59 மதிப்பீட்டு புள்ளிகளுடன் பத்தாவது இடத்தில் நீடிக்கின்றது.

அடுத்ததாக ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் இந்தியக் கிரிக்கெட் அணியின் விராட் கோஹ்லி 886 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் மற்றொரு வீரரான ரோஹித் சர்மா 881 புள்ளிகளுடன் இரண்டாவது உள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பாபர் அசாம், 827 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பாப் டு பிளெஸிஸ் 820 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் ரோஸ் டெய்லர் 817 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், தொடர்நாயகன் விருதை வென்ற கேன் வில்லியம்சன் இரண்டு இடங்கள் முன்னேறி, 796 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

ஆஸ்ரேலியா கிரிக்கெட் அணியின் டேவிட் வோர்னர் 794 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஜோ ரூட் 787 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் குயிண்டன் டிகொக் 781 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் நீடிக்கிறார்.

உலகக்கிண்ண தொடரில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஜேஸன் ரோய் மூன்று இடங்கள் முன்னேறி 774 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஒருநாள் பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் இந்தியக் கிரிக்கெட் அணியின் ஜஸ்பிரிட் பும்ரா 809 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் ட்ரெண்ட் போல்ட் 740 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் நீடிக்கிறார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் காகிஸோ ரபாடா, ஒரு இடம் முன்னேறி 694 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பெட் கம்மின்ஸ், ஓர் இடம் பின்தள்ளப்பட்டு 693 புள்ளிகளுடன் நான்காவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் இம்ரான் தஹீர், 683 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் நீடிக்கிறார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முஜிப் உர் ரஹ்மான் 681 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் நீடிக்கிறார்.

உலகக்கிண்ண தொடரில் சிறப்பாக பந்து வீசி விக்கெட்டுகளை வாரிக் குவித்த இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கிறிஸ் வோக்ஸ், ஆறு இடங்கள் முன்னேறி 676 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் மிட்செல் ஸ்டாக், ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 663 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் ரஷித் கான் ஓர் இடம் பின்தள்ளப்பட்டு 658 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

உலகக்கிண்ண தொடரில் சிறப்பாக பந்து வீசிய நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் மெட் ஹென்றி, ஐந்து இடங்கள் முன்னேறி 656 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். (ஐ)

# இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக மஹேல?

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், இதற்கு விண்ணப்பிக்க இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தனவுக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

ஐ.பி.எல். தொடரின் மூலம் தான் சிறந்த பயிற்சியாளர் என உலகுக்கு அறியத் தந்த மஹேல ஜயவர்தன, தனது வழிநடத்தலின் மூலம் இரண்டு முறைகள் மும்பை இந்தியன்ஸ் அணிக்காகச் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொடுக்க உதவியாக இருந்துள்ளார்.

இதன் அடிப்படையிலும், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள பயிற்சியாளருக்கான தகைமைகளும் அவருக்கு உள்ளமையால், மஹேல ஜயவர்தனவுக்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன என நம்பப்படுகின்றது.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரோடு இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த ரவி சாஸ்தரி, பந்து வீச்சுப் பயிற்சியாளர் பரத் அருண், துடுப்பாட்டப் பயிற்சியாளர் சஞ்சய் பாங்கர், களத் தடுப்புப் பயிற்சியாளர் ஆர் ஸ்ரீதர் ஆகியோரின் பதவிக்காலம் முடிந்தது.

எனினும், இந்தியக் கிரிக்கெட் அணி, ஒகஸ்ட் 3ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 3ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இதனால் இந்தத் தொடர் வரை அவர்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணத்தை இந்தியக் கிரிக்கெட் அணி வென்றிருந்தால், ரவி சாஸ்தரி மற்றும் அவரின் உதவியாளர்களின் பதவிக் காலம் தொடர்ந்து நீடிக்கப்பட்டிருக்கும்.

ஆனால் இந்தியா அணி, அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததால் அணி நிர்வாகம் மீது விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் பயிற்சியாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்களை வெளியிட இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் ரவி சாஸ்திரியும் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவருடன் துணைப் பயிற்சியாளர்களும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். வரவேற்கப்படும் விண்ணப்பங்கள் அடிப்படையில் பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

ரவி சாஸ்திரி, பரத் ஸ்ரீதர், சஞ்சங் பாங்கர் ஆகியோர் மீண்டும் விண்ணப்பம் செய்தால் போதுமானது. அவர்களுக்கு தொடக்க நிலை தேர்வு நடத்தப்படாமல் நேரடியாக தேர்வுக்கான பட்டியலில் இடம் பிடிப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஷங்கர் பாசு, பிசியோ பாட்ரிக் பர்கட் ஆகியோருக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கவும் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளது.

ரவி சாஸ்திரி கடந்த 2017ஆம் ஆண்டு இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக பதவி ஏற்றார். இவரின் பதவிக் காலத்தில்தான் இந்தியா அணி, ஆஸ்திரேலியா மண்ணில் முதன்முதலாக டெஸ்ட் தொடரைக்கைப்பற்றி வரலாற்றுச் சாதனைப் படைத்தது.

இந்த நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு கேரி கிரிஸ்டன், மஹேல ஜயவர்தன, டொம் மூடி மற்றும் விரேந்திர ஷேவாக் ஆகியோர் விண்ணப்பங்களை வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் ஒருவர் குறைந்தது மூன்று வருடங்கள் ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கும் அணியொன்றைப் பயிற்றுவித்திருக்க வேண்டும் என்பது, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தமது அணியின் பயிற்சியாளராக வரக்கூடிய நபருக்கு இருக்க வேண்டிய கட்டாய தகைமைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம், பயிற்சியாளர் பதவிக்கு



விண்ணப்பிக்கும் நபர் இரண்டு வருடங்கள் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணியொன்றை பயிற்றுவித்திருக்க வேண்டும் அல்லது மூன்று வருடங்கள் அங்கத்துவ நாடு ஒன்றினையோ அல்லது ஏ அணி ஒன்றினையோ பயிற்றுவித்திருக்க வேண்டும் என்பது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தமது தலைமைப் பயிற்சியாளராக வர விண்ணப்பிப்பவருக்கு இருக்கவேண்டிய வேறு தகுதிகளாக குறிப்பிட்டிருக்கின்றது.

அதேவேளை, குறித்த பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் குறைந்தது 30 டெஸ்ட் போட்டிகள் அல்லது 50 ஒரு நாள் போட்டிகள் என்பவற்றிலும் விளையாடியிருக்கவேண்டும் என்பதும் முக்கியமான விடயமாகும்.

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கேரி கிஸ்டன் இந்திய அணி, 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெல்லும் போது அதன் தலைமைப் பயிற்சியாளராக இருந்தார். கேரி கிஸ்டன் தற்போது ஐ.பி.எல். அணிகளில் ஒன்றான றோயல் செலஞ்சர்ஸின் பயிற்சியாளராகவும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், டொம் மூடி மற்றும் விரேந்திர ஷேவாக் ஆகியோர் 2017ஆம் ஆண்டில் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவிக்கு ரவி சாஸ்திரி தெரிவு செய்யப்பட்ட போது தலைமை பயிற்சியாளருக்கான ஏனைய விண்ணப்பதாரர்களாக இருந்துள்ளனர்.

பயிற்சியாளர் விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியான ஜூலை 30ஆம் திகதி கோடிடப்பட்டுள்ளது.

## கன்னியாவில்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

கன்னியா, நீராவியடி, கந்தப்பளை உள்ளிட்ட இடங்களில் மதப் பதற்றம் தோற்றுவிக்கப்பட்டு வரும் நிலையில், தமிழர்களின் பாரம்பரிய இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்தார் என்று சந்திப்பில் கலந்துகொண்ட தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

32 பேர் கொண்ட தொல்பொருளாராட்சித் திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனைச் சபையில் இருக்கின்ற அனைவரும் சிங்கள, பௌத்த வரலாற்றாசிரியர்கள் என்ற நிலைமையை மாற்றி, மேலதிகமாக 5 தமிழ் வரலாற்றாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்தத் தமிழ் வரலாற்றாசிரியர்களின் பங்களிப்புடனேயே இனிப் புராதன சின்னங்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும். இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை நான் சமர்ப்பிப்பேன்.

கன்னியா பிரதேசத்துக்குள் தமிழ் இந்துக்கள் நுழைவதைத் தடை செய்யத் தொல்பொருள் திணைக்களத்துக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது. இந்தத் திணைக்களத்தின் சிற்றூழியர்கள் சிலர் இத்தகைய அடாவடி நடவடிக்கையில் ஈடுபடுவதை திணைக்களப் பணிப்பாளர் தன் திணைக்கள மட்டத்தில் உடன் தடை செய்ய வேண்டும்.

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் மற்றும் அங்கு விகாரை அமைந்துள்ள பகுதியில் எந்தவித புராதன சின்னங்களும் அடையாளம் காணப்படவில்லை. அங்கே புராதன சின்னங்கள் இருப்பதாக விகாரை தேரர் சொல்வது உண்மைக்குப் புறம்பானது என தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் ஏற்றுக் கொண்டார்.

கன்னியா வெந்நீரூற்றுக் கிணறுகளைப் பாரமரிக்க, தொல்பொருள் திணைக்களத்துக்கு அதிகாரமில்லாததால், அவற்றை அந்தப் பிரதேச சபையிடம் கையளிக்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட செயலாளர் புஷ்பகுமார கூறுகின்றார். இந்நிலையில், வெந்நீரூற்றுக்கிணறுகளைப் பாரமரிப்பது யாரெனத் தீர்மானிக்க ஜனாதிபதி விரைவில் விசேட கூட்டத்தைக் கூட்டுவார்.

மலைநாட்டில் கந்தப்பளை – கோட்லோஜ் தோட்டத்தில் அமைந்துள்ள முனி கோவிலில் பௌத்த கொடியை அங்குள்ள விகாராதிபதி ஏற்றியமை பிழையானது. பௌத்த பிக்குகள் சட்டத்தைக் கையில் எடுப்பது பிழை. இந்தப் பிக்குக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் என்னுடன் அமைச்சரான ப.திகாம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.திலகராஜ், வேலுகுமார், எஸ்.வியாழேந்திரன் ஆகியோரும், தொல்பொருளாராட்சி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மாண்டாவேல, இந்து சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் உமா மகேஸ்வரன், என்னுடைய சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கணேஷ் ராஜா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவசர கூட்டம் தொடர்பில் தகவல் அனுப்பியும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. அ.அரவிந்தகுமார், வே.இராதாகிருஷ்ணன், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் வெளிநாடு சென்றுள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. காரணம் தெரியவரவில்லை – என்றார். (ஐ)

## பாதுகாப்புப்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

எந்த நேரமும் தயார் நிலையில் இருக்கின்றனர் என இராணுவ தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

ராகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் பாதுகாப்பு நிலைமை தற்போது வழமையான நிலைக்கு திரும்பியுள்ளது, எனினும் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கிறன. தற்போது உலக பயங்கரவாதத்துக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது., பயங்கரவாதம் முற்றுப்பெறும் காலத்தை சரியாகக் கூற முடியாது. அனைவருக்கும் அமைதியை பெற்றுக் கொடுக்க செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். இராணுவத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் – என்றார். (ஐ)

## 5ஜி அலைவரிசை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

இம்மானுவேல் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை முதல்வரால் வெளிப்படைத்தன்மையற்ற விதமாக நடைமுறைப்படுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டப்படும் 5ஜி அலைவரிசை திட்டத்துக்கு எதிராக நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ் மாநகர சபையினால் ஸ்மார்ட் லாம் போல் (SMART LAMP POLE) தொடர்பான ஒப்பந்தம் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக முறைப்படி கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு, தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட்டது. 5 ஜியையும் ஸ்மார்ட் லாம்போல் திட்டத்தையும் (SMART LAMP POLE) தொடர்புபடுத்தி சம்பந்தமில்லாத கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சந்தேகங்கள் இருப்பின் அதனை எங்களிடம் நேரடியாகக் கலந்துரையாட முடியும். ஆனால், இந்த விடயத்தில் நன்கு படித்தவல்லுநர்களும் மக்களுடன் இணைந்து தவறான புரிதலுடனான கருத்துக்களையே வெளியிடுகின்றனர்.

இலங்கையில் 5ஜி அலைவரிசை இல்லை என்பதற்கான ஆதாரம் எம்மிடம் உள்ளது – என்றார். (ஐ-07)

## வாக்குறுதிகளை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

யுறுத்தியுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் –

மனித உரிமைச் சபைக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு பிரிட்டன் தொடர்ந்தும் இலங்கையை வலியுறுத்தி வருவதுடன் ஆதரவு வழங்கி வருகின்றது. இலங்கையில் நீதி மற்றும் நிரந்தர நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இதுவே மிகச் சிறந்த கட்டமைப்பு என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

பிரிட்டிஸ் அரசு தொடர்ச்சியாக இலங்கை அரசுக்கு இதனை வலியுறுத்தி வருகின்றது. பிரிட்டன் தூதுவரும் இதனைத் தெரிவித்து வருகின்றார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை இன்னமும் பல நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது.

இலங்கை அரசு அரசமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வை வழங்கவேண்டும் – என்றார். (ஐ)

## 5ஜி கோபுரங்கள்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

முதல்வரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வைப் புறக்கணித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள், வெளிநடப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமாகவிருந்த நிலையில், பொதுமக்கள் அணிதிரண்டு, மாநகர முதல்வரின் அலுவலகம் மற்றும் சபை வாயிலை மூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு உள்ளிட்ட பல்வேறு மக்கள் சார்ந்த அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பலரும், கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின் ஒப்புதலின்றி, 5 ஜி அலைக்கற்றைக் கோபுரம் அமைப்பது தொடர்பாக மாநகர முதல்வர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார். பொது மக்களுக்கு 5ஜி அலைக்கற்றை தொடர்பான விழிப்புணர்வுகள் எதுவுமில்லை. போரால் பாதிக்கப்பட்ட எமக்கு 5ஜி அலைவரிசை கோபுரம் தேவையில்லை என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் முதல்வருக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

போராட்டத்தின்போது, முதல்வர் தனது அறையில் இருந்ததுடன், போராட்டக்காரர்கள் வெளியில் வருமாறு அழைப்பு விடுத்த போதும், அவர் போராட்டக்காரர்களை சந்திக்க வெளியே வரவில்லை.

குறிப்பாக, யாழ்ப்பாணம் மாநகரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், கோவில்கள், போன்ற பிரதான இடங்களில் 5ஜி அலைக்கற்றைக் கோபுரம் அமைப்பதை உடனடியாக நிறுத்துமாறும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

சுமார் 2 மணித்தியாலயங்கள் இந்த போராட்டம் தொடர்ந்ததுடன், இந்தப் போராட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் மற்றும் பல அரசியல் வாதிகள் போராட்டத்துக்குச் சமூகம் அளித்திருந்தனர்.

போராட்டத்தில், அரசியல் வாதிகளைக் கலந்துகொள்ள வேண்டாமென்றும், பொதுமக்கள் தெரிவித்ததுடன், 5ஜி அலைக்கற்றைக் கோபுரம் அமைப்பதற்கு வன்மையாக கண்டித்துள்ளதுடன், அலைவரிசை கோபுரம் அமைக்கும் பணியை நிறுத்தாவிடின், தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டோர் எச்சரிக்கை விடுத்தனர். (ஐ-07)

## அரசுக்கு...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறார் வடக்கு மாகாண அவைத்தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான சி.வீ.கே.சிவஞானம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடிவருடிகளாக அல்லது அந்தக் கட்சிக்குப் பின்னால் போகின்றவர்களாக – கண்ணை மூடிக் கொண்டு இருப்பவர்களாக நாம் இருப்போம் என அவர்கள் நினைத்தால் அதுவும் தவறு என்றும் அவர் கூறினார்.

கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இரண்டு வருடத்துக்குள் தீர்வு என யாழ்ப்பாணத்தில் வைத்து பிரதமர் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே சிவஞானம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் வந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு, மூன்று வருடத்துக்குள் தீர்வு என்றும் சொல்லியிருக்கின்றார். அவரது இந்தக் கருத்துக்கள் சாத்தியமில்லை என்பதுடன் ஏமாற்றும் கருத்துக்களாகவே அமைகின்றன. ஆக நாங்கள் எல்லாம் வெறும் ஏமாளிகள் என்று நினைக்க முடியாது. இன்னும் ஒரு வருடத்துக்குள் அரசு முடிவடைகிறது. அதே நேரத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேறு ஒருவர் வருவாராயின் அதற்கு முன்னரே இந்த நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்.

இவ்வாறான நிலையில் அடுத்து வரும் மூன்று வருடத்துக்குள் தான் தீர்வு தருவேன் என்று அவர் சொல்வதை நாங்கள் நம்ப வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் என யாராவது நினைத்தால் வெறும் மடையர்களாகத்தான் நாங்கள் இருக்க வேண்டும். அது சாத்தியமில்லை – என்றார். (ஐ-07)

## புதிய கூட்டில்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான விக்னேஸ்வரன் தலைமையிலான மாற்று அணி தொடர்பில் குழப்பங்கள் நீடித்து வரும் நிலையில் – மேற்படி இரண்டு தரப்பினரும் திடீரெனச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் தலைமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அனந்தி சசிதரன் மற்றும் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் தலைமையிலான கட்சி அல்லது அமைப்புக்கள் இணைந்து புதிய கூட்டணியை அமைக்கவுள்ளதாக பேசப்பட்டிருந்தது.

இந் நிலையில் முதலமைச்சரின் புதிய மாற்று அணியில் சுரேஷ்பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை இணைத்துக் கொள்ளக் கூடாதென்றும் அவ்வாறு அந்தக் கட்சியை இணைத்துக் கொண்டால் தாம் அந்தக் கூட்டுக்கு வரப்போவதில்லை எனவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இதனால் புதிய அணி அமைப்பது தொடர்பான பேச்சுக்கள் பெரும் இழுபறிகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இவ்வாறானதொரு நிலைமையிலேயே தமிழர் சுயாட்சிக் கழகத்தின் அனந்தி சசிதரனுக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் திடீரென நேற்றுப் பேச்சு இடம்பெற்றுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-07)

## ஜனாதிபதியின்...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அடுத்த வாரம் ஜனாதிபதியைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசக் கூட்டமைப்பு தீர்மானம் எடுத்துள்ளது.

கல்முனை வடக்குப் பிரதேச செயலக விவகாரம் குறித்து பேச கோடீஸ்வரன் எம்.பிக்கு நேற்றைய பேச்சில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அவரையும் கலந்து கொள்ளவேண்டாம் எனக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியமான சில உறுப்பினர்கள் வெளிப் பிரதேசங்களில் உள்ள காரணத்தினாலும் வேறு சில முக்கிய காரணங்களுக்காகவும் தாம் கலந்து கொள்ளவில்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ஐ)

## தமிழ் மக்களை...

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

டத்தில் தீர்வு என்று சொல்லித் தமிழ் மக்களை ஏமாற்ற முற்பட்டிருக்கின்றார். இது உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் வங்குரோத்து அரசியல் நிலைமையை வெளிப்படுத்துகிறது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் இரண்டு வருடத்துக்குள் தமிழ் மக்கள் எதிர்பார்க்கக்கூடிய அரசியல் தீர்வை தான் எடுத்துக் கொடுப்பேன் என்று கூறுவது உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வங்குரோத்து நிலைமையை வெளிப்படுத்துவதாகத் தான் இருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியாக இருக்கலாம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருக்கலாம், பொதுஜன பெரமுனவாக இருக்கலாம் இவை அனைத்தும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை முன்னெடுக்கின்ற ஒரே நோக்கத்துக்காகச் செயற்படுகின்ற தரப்பினராகவே உள்ளனர்.

அப்படிப்பட்ட தரப்புகளுக்குத் தங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையில்லாத ஆதரவை வழங்குகிறது என்ற காரணத்தினாலும் தங்களுடைய நலன்கள் முற்று முழுதாகக் கைவிட்டு வல்லரசுகளின் விருப்பத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சி போன்ற தரப்புக்களை ஆதரித்துக் கொண்டிருப்பது துரோகம் என்றும் மக்கள் கருதுகின்றனர். அதனால் தான் கூட்டமைப்பையே தூக்கியெறியும் நிலைக்குத் தமிழ் மக்கள் வந்திருக்கின்றனர்..

அப்படிப்பட்ட மிக மோசமாக ஒரு பின்னடைவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்திருக்கின்ற நிலையில், தங்கள் பங்காளிகளாக கூட்டமைப்பினர் உள்ள காரணத்தால் ஏதோவொரு வகையில் மக்களை ஏமாற்றியாவது கூட்டமைப்பைக் காப்பாற்றுவதற்கு இப்படிப்பட்ட கருத்துக்களைப் பிரதமர் சொல்லியிருக்கிறார் – என்றார். (ஐ-07)

# கட்டுவப்பிட்டிய தேவாலயம் 21ஆம் திகதி திறக்கப்படும்





கொழும்பு, ஜூலை 19

உயிர்த்த ஞாயிறு தினத்தில் தாக்கப்பட்ட நீர்கொழும்பு கட்டுவப்பிட்டிய சென் செபஸ்ரியன் தேவாலயம் எதிர்வரும் 21ஆம் திகதி மீளவும் வழிபாட்டுக்காகத் திறக்கப்படவுள்ளது.

கொழும்பு கர்தினால் இல்லத்தில் நேற்று முன் தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கொழும்பு துணை ஆயர் அந்தோனி ஜெயக்கொடி இதனைத் தெரிவித்தார்.

தாக்குதல்களில் கொல்லப்பட்ட, காயமடைந்தவர்கள் சார்பாக, மீண்டும் திறக்கப்பட்ட நாளில் வழிபாடும் இடம்பெறும். (ஐ)

# போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் வருமானத்தை ஈட்ட ஆஸி. உதவி!

## மன்னாரில் உணவகம் நேற்றுத் திறப்பு



**மன்னார், ஜூலை 19**
**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நலன்களை கருத்திற் கொண்டு மாந்தை மேற்கு வண்ணாகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட ஆரோக்கியா உணவகம் மற்றும் கல்வி நிலையம் ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளன.**

ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியுடன் பிரிஜிங் லங்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்த ஆரோக்கியா உணவகம் மற்றும் கல்வி நிலையம் ஆகியன நேற்று முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை ஆஸ்திரேலியத் தூதுவர் டேவிற் கோலி கலந்து கொண்டு இந்தச் செயற்றிட்டங்களை, வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

போரினால் கணவனை இழந்த பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், வலுவிழந்த கணவர்களுடன் வாழும் பெண்கள் தொடர்ச்சியாக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வண்ணாகுளத்தைச் சேர்ந்த பெண்களினால் இந்த உணவகம் முகாமைத்துவம் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வில், மாந்தை பிரதேச சபைத் தலைவர், பிரிஜிங் லங்கா ஊழியர்கள், அதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஹேமசிறி, பூஜிதவின் பிணைக்கு எதிராகச் சட்டமா அதிபர் மனு!

கொழும்பு, ஜூலை 19

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபரின் பிணைக்கு எதிராகச்சட்டமா அதிபரினால் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மீள்பரிசீலனை கோரப்பட்டுள்ளது.

இந்த மீள்பரிசீலனை கோரிய மனு நேற்றுச்சட்டமா அதிபரினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் பிரகாரம் இருவரையும் கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரினால், பதில் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. அதற்கமைவாகச் சம்பவம் தொடர்பாக சாட்சியமளிப்பதற்காக, கடந்த ஜூலை 02ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெனாண்டோ, கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, நாரஹென்பிட்டியிலுள்ள பொலிஸ் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் குறித்த தினத்திலேயே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் 9 ஆம் திகதி தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் செல்ல கொழும்பு பிரதம நீதிதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசிய தொலைக்காட்சியின் அலைவரிசை ஒளிபரப்பு தடை

கொழும்பு, ஜூலை 19

இலங்கை தேசிய தொலைக்காட்சியின் உப அலைவரிசை ஒன்று நாட்டின் பல இடங்களில் ஒளிபரப்பாகாமல் தடை ஏற்பட்டுள்ளது.

அந்த அலைவரிசையைக் கடத்தும் கோபுரங்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டதே இதற்கான காரணமெனச் சொல்லப்படுகிறது. உரிய நேரத்தில் மின் கட்டணம் செலுத்தாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மின்சக்திக்கு பொறுப்பான அமைச்சர் பிறப்பித்துள்ள கண்டிப்பான உத்தரவினால் மின்சாரக் கட்டணம் முழுமையாகச் செலுத்தப்படும் வரை இந்தக் கோபுரங்களுக்கான மின் இணைப்பு மீள வழங்கப்படமாட்டாதெனத் தெரிகிறது .இதற்குள் அரசியல் காரணங்களும் இருக்கின்றன என மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (ஐ)

# மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

நிலவும் சீரற்ற வானிலையின் காரணமாக இரத்தினபுரி, பலாங்கொடை, இரத்தினபுரி – வெவல்வத்த வீதி ஆகிய இடங்களில் மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆய்வு மையத்தாலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சு.கவும் பெரமுனவும் ஒன்றிணையவேண்டும்

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்கவேண்டுமாயின், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் இரண்டும் ஒன்றிணையவேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களிடம் பிரபலமடைந்த, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எங்களிலிருந்து ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்ய வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர் எனவும் அவர் கூறினார். (ஐ)

# வெலிக்கடைச் சிறைக் கலவர சந்தேக நபர்களுக்குப் பிணை

கொழும்பு, ஜூலை 19

2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பான வழக்கு விசேட மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அதேநேரம் இந்த வழக்கின் சந்தேகநபர்கள் அனைவருக்கும் நீதிமன்றம் பிணை வழங்கியது. (ஐ)

# நாடாளுமன்றைக் கலைக்குமாறு வலியுறுத்துகிறார் நாமல் எம்.பி.

ஜனாதிபதித் தேர்தல்களை தாமதமின்றி நடத்த முடியாவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசை வலியுறுத்தினார்.

நேற்றுக் கருத்து தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட அரசு முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

மாகாண சபை தேர்தலை இந்த அரசு எவ்வாறு பிற்போட்டதோ அதேபோன்றே ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போட முயற்சிக்கின்றது என நாமல் தெரிவித்தார்.

நவம்பர் 08 முதல் டிசெம்பர் 08 க்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.07.2019 இல் வெளியிடப்பெற்றது.